மாநகர சபை, யாழ்ப்பாணம்.

விலை ரூபா: 15.00


*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 புரட்டாதி 13 திங்கட்கிழமை (29.09.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 285




# வன்னி மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அரசின் கடமை

## பிரான்ஸ் அரசு வலியுறுத்தல்

(பாரிஸ்)

**வன்னியிலுள்ள மக்களின் பாதுகாப்பை உறுதிப் படுத்தி அவர்களுக்கான உதவிகளை வழங்குவது இலங்கை அரசாங்கத்தின் கடமை என பிரான்ஸ் அரசு வலியுறுத்தியுள்ளது. வடக்கில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள மக்களின் பரிதாபநிலை மிகுந்த கவலையளிப்பதாகவும் பிரான்ஸ் தெரிவித்துள்ளது.** *(12 ஆம் பக்கம் பார்க்க)*

## மட்டக்களப்பில் தாக்குதல் 6 இராணுவத்தினர் உயிரிழப்பு

### விடுதலைப்புலிகள் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள திகிலிவெட்டைப் பகுதியில் இராணுவத்தினர் அமைத்திருந்த மினி முகாம் மீது நடத்திய அதிரடித் தாக்குதலில் ஆறு பேர் கொல்லப்பட்டுள்ளனர். ஏனையோர் தப்பியோடி விட்டனர். ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளதாவது,

கிரான் பிரதேச செயலகத்திற்குட்பட்ட திகிலிவட்டைப் பகுதியில் இராணுவத்தினர் மினி முகாம் அமைத்திருந்தனர். இம் முகாம் மீது நேற்று அதிகாலை 2.15 மணியளவில் விடுதலைப்புலிகள் அதிரடித் தாக்குதல் நடத்தினர். *(12 ஆம் பக்கம் பார்க்க)*

## திருநெல்வேலியில் இளைஞன் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலிச் சந்தைக்கு அண்மையில் நாவலடி ஒழுங்கைக்குள் வைத்து இளைஞர் ஒருவர் ஆயுததாரிகளினால் நேற்றுப் பிற்பகல் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சுட்டுக் கொல்லப்பட்டவர் அடையாளம் காணப்படவில்லை. அவர் பிறவுண் நிற ரீசேட்டும் சாம்பல் நிற ஜம்பரும் அணிந்துள்ளதாகவும் அவரின் உடையில் வர்ணப் பூச்சுக்கள் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சுமார் 25 வயது மதிக்கத்தக்க அவ் இளைஞனின் சடலம் நேற்று மாலை கோப்பாய்ப் பொலிஸாரினால் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ச-49)

## பொலிஸார் பயணம் செய்த ஆட்டோ மீது வவுனியாவில் தற்கொலைத் தாக்குதல்

### இருவர் உயிரிழப்பு; 11 பேர் படுகாயம்

(வவுனியா)

வவுனியாவில் பொலிஸாரை ஏற்றிச் சென்ற ஆட்டோவை இலக்கு வைத்து நேற்றுப் பிற்பகல் 3.15 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டனர்.

பொலிஸார்,படையினர் உட்பட 8 பேரும் பொதுமக்கள் மூவரும் படுகாயமடைந்தனர். இத் தாக்குதலில் தற்கொலைதாரியும் ஆட்டோச் சாரதியும் சம்பவ இடத்தில் உயிரிழந்ததாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடமை முடிந்து தமது விடுதிகளுக்குச் செல்வதற்காக 4 பொலிஸார் ஆட்டோவில் ஏறியிருந்தபோது சைக்கிளில் வந்த விடுதலைப்புலிகளின் தற்கொலைக் குண்டுதாரி குண்டை வெடிக்க வைத்ததாக இராணுவத் தலைமையகம் கூறியுள்ளது.

இதில் 4 பொலிஸாரும் வீதிக் கடமையில் இருந்த 4 படையினரும் வீதியால் சென்று கொண்டிருந்த 3 பொதுமக்களுமாக 11 பேர் காயமடைந்தனர். *(12 ஆம் பக்கம் பார்க்க)*

## வன்னியில் மனிதாபிமானப் பணிகளை மீண்டும் ஆரம்பிக்க ஐ.நா. இணக்கம்

### உணவு லொறிகள் இவ் வாரம் செல்லும்

(கொழும்பு)

வன்னிப் பகுதியில் உணவு மற்றும் இதர உதவி நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதாக ஐ.நா. அறிவித்துள்ளது. வன்னி மக்களுக்கான உணவுப் பொருள்கள் எடுத்துச் செல்லப்படும் பாதை குறித்து விடுதலைப்புலிகளிடமும் அரசாங்கத்திடமும் ஒப்புதல் பெறப்பட்டுள்ளதாக ஐ.நாவின் பேச்சாளர் கோர்டன் வெய்ஸ் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. கொடியுடன் உணவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு இவ் வாரம் வாகனத் தொடரணி ஒன்று வன்னிக்குச் செல்லவுள்ளது.

இது குறித்து *(12 ஆம் பக்கம் பார்க்க)*

## அரசு சாரா நிறுவனங்களுக்கான அரசின் காலக்கெடு இன்றுடன் முடிவு

### பாதுகாப்புச் செயலர் கோத்தபாய தெரிவிப்பு

(கொழும்பு)

வன்னியில் தன்னார்வத் தொண்டுகளில் ஈடுபட்டிருந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் குறித்த பிரதேசத்தை விட்டு வெளியேறுவதற்கு வழங்கப்பட்டிருந்த காலக்கெடு இன்றுடன் முடிபடைவதாகப் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இனிவரும் காலங்களில் தொடர்ச்சியாக வன்னியில் தங்கியிருக்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு அரசாங்கம் பாதுகாப்பு வழங்காதென அவர் குறிப்பிட்டார்.

விடுவிக்கப்படாத பகுதிகளிலிருந்து அரசாங்கக் கட்டுப் *(12 ஆம் பக்கம் பார்க்க)*

## நாராஹென்பிட்டியவில் 4 தமிழர்கள் கைது

(கொழும்பு)

நாராஹென்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் தமிழர் நான்கு பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இந்தத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டதாக நாராஹென்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

தமது அடையாளத்தை உறுதிப்படுத்தத் தவறியவர்களும் இப் பகுதியில் தங்கியிருப்பதற்கான காரணத்தைக் கூறாதவர்களுமே கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-5)

## 4 ஆம் கட்ட ஈழப் போரின் உச்சக்கட்டம் எதிர்வரும் வாரங்களில் தெரியவரும்




### இக்பால் அத்தாஸ் ஆருடம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் பலமான இடமாகிய வன்னியின் கதவடியில் தற்போது இலங்கைப் படையினர் இருப்பதாகவும் அவர்கள் இந்த வாரம் கிளிநொச்சியை நோக்கித் தாக்குதல்களை ஆரம்பிக்கவுள்ளதாகவும் போரியல் ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியின் 85 வீதமான மக்கள் தற்போது தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளதாக இக்பால் அத்தாஸ் குறிப்பிட்டுள்ளார். வன்னிக்கான உணவுகளைக் கொண்டு சுமார் 60 பாரவூர்திகள் தற்போது அங்கு *(12 ஆம் பக்கம் பார்க்க)*

# நல்லூர் பிரதேச செயலகத்தின் கலாசார விழா நிகழ்வுகள் -28.09.2008


சட்டநாதர் சிவன் ஆலயத்தில் இருந்து விருந்தினர்கள் காவடி, கரகாட்டங்களுடன் அழைத்து வரப்படல்...

விருந்தினர்களின் வரவேற்பின் போது...



நல்லூர் பிரதேச செயலர்.பா.செந்தில் நந்தனன் தலைமை உரை...



யாழ்.அரசாங்க அதிபர் க.கணேஷ் பிரதம விருந்தினர் உரை...



யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா சிறப்பு விருந்தினர் உரை...



நல்லூர் பிரதேச சபை செயலாளர் எம்.ஜே.சாந்தசீலன் கௌரவ விருந்தினர் உரை...




செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் சிறப்பு உரை...





கொக்குவில் கலாபவனம் மாணவிகள் வழங்கிய நிருத்திய வந்தனம் நாட்டிய நிகழ்ச்சி...






நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் 2008 ஆம் ஆண்டுக்கான 'கலைஞானச்சுடர்' விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட கலைஞர்கள்...

நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு பகுதியினர்...


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சுதாதரன்

பிரணவசுதன்

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய்அருள்மிகு ஸ்ரீ கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவன் சு.பிரணவசுதன் நடந்து முடிந்த 2008ம் ஆண்டு 5-ம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 145 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையை அவரது 10ஆவது பிறந்த தினமான (29.09.2008) இன்று வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

கண்ணகாம்பிகா அம்மன் ஆலய பரிபாலன சபையினரும் தொண்டர் சபையினரும்

மூளாய் வீதி, வட்டுக்கோட்டை

(C-1613)



## மணமகன் தேவை

உயர் குருகுலம் 1980, கேட்டை 2 ஆம் பாதம், செவ்வாய் குற்றமில்லாத, பாவம் அற்ற, A/L படித்த, கணனி கற்ற மகளிற்கு அரச உத்தியோகம் அல்லது வெளிநாட்டில் தொழில் புரியும் மணமகனை பெற்றோர் தேடுகின்றனர்.

தொடர்புக்கு:- மே/பா வலம்புரி, விளம்பர இல-1774, இல.03, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(1774)


## நவராத்திரி விழா

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகை அம்மன் ஆலய நவராத்திரி விழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 9ஆம் திகதி வியாழக்கிழமை வன்னி வாழைவெட்டும் நிகழ்வுக்காக வட்டு. மத்திய கல்லூ ரிக்கு முன்பாக உள்ள இலுப்பை யடி ஞானவைரவர் ஆலயத்துக்கு சென்று வாழை வெட்டும் வைபவம் இடம்பெறும். (ச-5)


## வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க தீபாவளியை முன்னிட்டு

27.09.2008 - 27.10.2008 வரை



விசேட மலிவு விற்பனை

◎ஆண்கள் பெண்களுக்கான அனைத்து துணி வகைகளையும் மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

◎ரெடிமேட் ஆடைகளுக்கு அதிகூடிய கழிவு வழங்கப்படும்.

உடன் விரையுங்கள்...

**லைடன் புடைவை நிலையம்**

410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P :- 021 222 2381

(C-1612)


## ஜெயந்தி தின விழா

மகாத்மா காந்தியின் ஜெயந்தி தினமான எதிர்வரும் 2ஆம் திகதி போதனா வைத்தியசாலை முன்னால் இருக்கும் காந்தி சிலைக்கு காலை 10 மணிக்கு மாலை அணிவித்தலும் அதனைத் தொடர்ந்து சங்கப் பணிமனையில் பொதுக் கூட்டமும் நடைபெறும் என காந்தி சேவா சங்கம் அறிவித்துள்ளது. (ச)

# இன்று ஒரு தகவல்

## மன இறுக்கம்

ஒருவர் "கோயிலுக்குப்போய் முடி இறக்கிக் கொண்டு வரலாம் என்று இருக்கிறேன்'' என்று ஒரு வருடமாக சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால் ஒருநாளாவது அவர் போய் வந்தபாடில்லை !

''ஏன் சேர் இப்படி தள்ளிப் போட்டுக்கொண்டே இருக்கிறீர்கள்... ஒருநாள் போய் மொட்டைபோட்டுக் கொண்டு வந்துவிட வேண்டியது தானே!'' என்றேன்.

" என்ன சேர் பண்றது... எப்ப பார்த்தாலும் "டென்ஷன்" கோயிலுக்குப் போகவே நேரம் கிடைப்பதில்லை"என்றார்.

ஒரு வருடம் கழித்து ஒருநாள் அவரைப் பார்த்தேன்.

''என்ன...கோயிலுக்குப் போய் வந்திட்டீர்கள் போல இருக்கே...''என்றேன்.

அவர் கோபமாக''நான் எங்கே சேர் போனேன். முடியெல்லாம் தானாகவே கொட்டிவிட்டது''என்றார்.

"எதனால் இப்படி ஆயிற்று"என்று விசாரித்தேன்.

''டென்ஷன்தான் இதற்குக் காரணம் என்று டாக்டர் சொல்கிறார் !" என்றார் அவர்.

இது சிலபேருக்கு ஆச்சரியமாக இருக்கலாம். ஆனால் முடி உதிர்வதற்கும் வழுக்கை விழுவதற்கும் டென்ஷனும் ஒருகாரணம் என்பது தான் உண்மை.

டென்ஷனால் என்னென்ன பாதிப்புகள் வரும் தெரியுமா? தலைவலி,இடுப்புவலி,முதுகுவலி,அஜீரணம், மலச்சிக்கல், மூலம், சர்க்கரை வியாதி, இதயக்கோளாறு, ஹைபர் டென்ஷன்,ஹிஸ்டீரியா, வேறு சில மனநோய்கள் பெண்களுக்கான மாதாந்தக் கோளாறுகள், ஹோர்மோனால் உடன் விளைவுகள், முடி உதிர்தல்,வழுக்கை இப்படி எது வேண்டுமானாலும் வரலாமாம்.

ஒருவர் கடுமையான டென்ஷனில் இருந்தார். அந்த சமயத்தில் Gastroscope எனும் கருவிமூலம் அவருடைய வயிற்றுக்குள் சோதனை செய்து பார்த்தார்கள்.

ஆராய்ந்து பார்த்ததில், இளஞ்சிவப்பு நிறமாக இருக்க வேண்டிய அந்த உள் பகுதி கடும் சிவப்பு நிறமாக இருந்ததாம்.

அதாவது, டென்ஷனாக இருக்கும்போது வயிற்றில் அமிலம் அதிகமாக சுரக்குதாம். அதனால் இப்படி சிவந்திடுமாம். அடிக்கடி இப்படி ஆகும்போது மனிதனுக்கு Hyper acidity என்ற நிலை உண்டாகி அது முற்றினால் அல்சராக கூட மாறிவிடுமாம்.

டென்ஷன் என்பது இயற்கை நமக்குக் கொடுத்திருக்கும் ஒரு எச்சரிக்கை உணர்வு – உடல் ரீதியான ஒரு தற்காப்பு உணர்வு.

ஆனால் இப்பொழுது உள்ள சூழ்நிலையில் எதற்கெடுத்தாலும் டென்ஷனுக்கு ஆளாகிவிடுகிறோம். நமக்கென்று ஒரு கௌரவத்தை எதிர்பார்க்கின்றோம். அந்த கௌரவத்துக்கு ஒரு குறைவு வரும்போது உடனே டென்ஷன்!

வரவேண்டிய நேரத்திற்கு பஸ் வரவில்லை என்றால் டென்ஷன்!

அநாவசியமாக மனதையும் உடம்பையும் போட்டு அலட்டிக் கொள்ளாதீர்கள். எதையும் சுலபமாக எடுத்துக் கொள்ளுங்கள். எப்பொழுதும் Positive ஆக நினைக்க கற்றுக் கொள்ளுங்கள் .Negative ஆக யோசித்துக் கொண்டிருக்காதீர்கள்.

வீட்டில் ஒரு பொருள் முடிந்துவிட்டது என்றால் 'அது இல்லை' என்று நினைக்காதீர்கள். நாளைக்கு வாங்கிக் கொள்ளலாம் என்று நினையுங்கள்.

எதற்கெடுத்தாலும் எனக்கு நேரமில்லை என்று சொல்லும் பழக்கத்தை விட்டுவிடுங்கள். எதையும் முறையாகத் திட்டம் போட்டு செய்துகொண்டு வந்தால் எல்லாவற்றுக்கும் நேரம் இருக்கும்.

எனக்கு இன்றைக்கு நேரம் கிடைக்கவில்லை. அதனால் பல் விளக்கவில்லை என்று யாராவது சொல்வீர்களா? பொறுப்பாக உங்கள் கடமையைச் செய்யுங்கள். அதே நேரத்தில் ஆனந்தமாக இருக்கப் பழகிக்கொள்ளுங்கள். மன இறுக்கம் இல்லாமல் வாழும் வாழ்க்கைதான் மகத்தான வாழ்க்கை! அதிகமாக ஆசைப்படுவதும் டென்ஷனுக்கு ஒரு காரணம்.

ஒருவர் இருந்தார். அவர் சின்ன டென்ஷனுக்கு கூட இடம்கொடுக்கமாட்டார்.

அதிகமாக ஆசைப்படவும் மாட்டார். ஒருநாள் ஆண்டவனே அவரைத் தேடி வந்து "நீ எவ்வளவு காலம் உயிரோடு இருக்கவேண்டும் என்று ஆசைப்படு கிறாய்? என்று கேட்டிருக்கிறார்.

அதற்கு இவர், " நான் அதிகமாக ஒன்றும் ஆசைப்படவில்லை. நான் சாகும்வரை உயிருடன் இருக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறேன் அதுபோதும்'' என்றாராம் டென்ஷன் இல்லாத ஆசாமி.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# கிளிநொச்சிக்கு உணவுப் பொருள் அனுப்புவதற்கான தடையை ஆராய இன்று கொழும்பில் விசேட மாநாடு

(கொழும்பு)

கிளிநொச்சி மாவட்டத்திற்கு உணவுப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கு பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள தடை உத்தரவு குறித்து ஆராய்வதற்காக இன்று கொழும்பில் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் தலைமையில் உயர்மட்ட மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது.

இம் மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு கிளிநொச்சி , முல்லைத்தீவு ,வவுனியா ஆகிய மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர். அத்துடன் ஜனாதிபதி செயலக அதிகாரிகளுக்கும் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

கிளிநொச்சிக்கான உணவு விநியோகம் இம் மாதம் பதினைந்தாம் திகதி முதல் பாதிக்கப்பட்டுள்ளது.

உணவுப் பொருட்களை ஏற்றிச் செல்லும் லொறிகளை ஓமந்தைக்கு அப்பால் செல்ல இராணுவத்தினர் அனுமதிப்பதில்லை. கிளிநொச்சிக்கு உணவுப்பொருட்களை கொண்டு செல்வதற்கு லொறிகளுக்கு அனுமதி வழங்கவேண்டாம் என பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டிருப்பதாக ஓமந்தை சோதனைச் சாவடியில் உள்ள இராணுவத்தினர் தெரிவிக்கின்றனராம்.

குறித்த இரண்டு வார காலத்தில் கிளிநொச்சிக்கு 120 லொறிகளில் உணவு பொருட்கள் கொண்டு செல்லப்பட்டிருக்க வேண்டும். ஆனால் கடந்த புதன்கிழமை ஐந்து லொறிகளுக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டது.உணவுப் பொருட்கள் கிளிநொச்சிக்கு செல்லாமையினால் அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்நிலைமை தொடருமானால் நிலைமை மோசமடையும் என கிளிநொச்சி அரச அதிபர் ந. வேதநாயகன் தெரிவித்தார். உலக உணவுத் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டு வந்த நிவாரணமும் தற்போது வழங்கப்படுவதில்லை என குறிப்பிட்ட அரசாங்க அதிபர் தற்போது வவுனியாவில் இயங்கும் உலக உணவு திட்ட அலுவலகத்தில் இருந்து கிளிநொச்சிக்கு உணவுப் பொருட்களை அனுப்ப முடியாத நிலை இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை வவுனியாவில் இயங்கும் உலக உணவுத்திட்ட களஞ்சியசாலையில் மூவாயிரம் மெட்ரிக் தொன் அத்தியாவசிய பொருட்கள் கிளிநொச்சிக்கு அனுப்புவதற்காக தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. இதற்கான அனுமதியை அந்த அமைப்பு பாதுகாப்பு அமைச்சிடம் கோரி உள்ளது.

எனினும் இதுவரை பொருட்களை கிளிநொச்சிக்கு கொண்டு செல்வதற்கான பாதுகாப்பு அமைச்சில் அனுமதி கிடைக்கவில்லை என அந்த அமைப்பின் பெயர் குறிப்பிட விரும்பாத உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ-5)

### இனப்பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு தொடர்பான கருத்துக்கணிப்பு

# பேச்சுவார்த்தை மூலமே சமாதானம் -தமிழ் சமூகம்
# போர் முடிந்த பின்னரே சமாதானம் -சிங்கள சமூகம்

மலையகத்தில் உள்ள பெரும்பான்மையான தமிழர்கள் நடைமுறை யுத்தம் நிறுத்தப்பட்டு , இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படவேண்டும் என விருப்பம் கொண்டுள்ளதாக சமாதானத்தை நம்பிக்கை சுட்டெண்ணில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2008 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வெளியிடப்பட்டுள்ள இந்த சுட்டெண்ணின் படி , சிங்கள சமூகத்தின் பெரும் பாலானவர்களும் இலங்கையின் இனப் பிரச்சினைக்கான தீர்வு நெருங்கி வந்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

சிங்கள மக்களை பொறுத்த வரையில் அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகளை தோற்கடிப்பதன் மூலம் இந்த சமாதானம் ஏற்படும் என நம்புகின்றனர். எனினும் இதனை மறுக்கும் தமிழ் சமூகத்தவர்கள் யுத்தம் நிறுத்தப்பட்டு பேச்சுவார்த்தை ஒன்றின் மூலமே இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்படும் என நம்புகின்றனர். போர் நடந்துகொண்டிருக்கும் போதே இனப்பிரச்சினனைக்கு தீர்வு காணப்படவேண்டும் என தமிழ் மற்றும் முஸ்லிம்கள் எண்ணம் கொண்டுள்ளனர். எனினும் சிங்களவர்கள் போர் முடிந்த பின்னரே சமாதான தீர்வு ஏற்படவேண்டும் என எண்ணுகின்றனர். இந்தக் கருத்துக்கணிப்பு மலையகத் தமிழர்கள் , முஸ்லிம்கள் மற்றும் சிங்களவர்கள் மத்தியில் எடுக்கப்பட்டுள்ளது. எனினும் இதில் வடக்கு கிழக்கு மக்கள் சேர்க்கப்படவில்லை. எனவே அவர்களின் கருத்துக்கள் இதில் பிரதிபலிக்கவில்லை. (அ-5)

## இராசி பலன்

29.09.2008
(புரட்டாதி 13, திங்கட்கிழமை)
உத்தரம் முற்பகல் 09.49மணிவரை
அமாவாசை பிற்பகல் 1.50மணிவரை
இராகுகாலம்-07.32-09.02 மணிவரை
சுபநேரம்-12.02-01.32 மணிவரை
மஹாளயபக்ஷ முடிவு
அமாவாசை விரதம்

| | |
|---|---|
| மேடம் | காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை, நண்பர்கள் உதவி, உடல்நலம். |
| இடபம் | வியாபார நன்மை, சிறுவியாதி, முயற்சிதாமதம், பணக்குறைவு. |
| மிதுனம் | தாய்வழிஉறவு, மனச்சஞ்சலம், சுபசெலவு, முயற்சி தாதமதம். |
| கடகம் | கூட்டுமுயற்சி, இனிய நிகழ்வு, தனவருவாய், பிரயாணசுகம். |
| சிங்கம் | விவாதம், காரியதாமதம், வீண் செலவு, கௌரவக்குறைவு. |
| கன்னி | வெகுமானம், கற்பனை மிகுதி, புதிய முயற்சி, நண்பர்கள் சந்திப்பு. |
| துலாம் | பிதாசிந்தை, பிரயாணம், முயற்சிதாமதம், சயன சுகக் குறைவு. |
| விருச்சிகம் | கீர்த்தி, காரிய நன்மை, குடும்ப சுகம், விருந்துபசாரம். |
| தனுசு | அதிகாரம், நண்பர்கள் உதவி, கடின உழைப்பு, தேகநலன். |
| மகரம் | வீண்பயம், புதிய திட்டமிடல், முயற்சி தாமதம், எதிர்பாராத நன்மை. |
| கும்பம் | பிரயாண பயம், காரிய தடங்கல், ஆரோக்கியக் குறைவு, பணக் குறைவு. |
| மீனம் | செல்வாக்கு, காரிய அனுகூலம், திடீர் பயணம், அபூர்வ சந்திப்பு. |

வளவன்

# இத்தாலிய பிரஜை ஒருவர் புலிகளுடன் இணைவு;
## வன்னியில் தங்கியிருக்கப் போவதாகவும் தெரிவிப்பு
### சிங்கள ஊடகம் தகவல்

சர்வதேச அரச சார்பற்ற நிறுவனமொன்றின் பணியாளர் ஒருவர் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்துகொண்டுள்ளதாகச் சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இத்தாலி நாட்டைச் சேர்ந்த திட்டமுகாமையாளர் ஒருவரே இவ்வாறு புலிகளுடன் இணைந்துள்ளதாகப் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். விடுவிக்கப்படாத பகுதிகளிலிருந்து அரச சார்பற்ற நிறுவனங்களை வெளியேறுமாறு அரசாங்கம் விடுத்த உத்தரவைத் தொடர்ந்து குறித்த இத்தாலிய பிரஜை விடுதலைப்புலிகளுடனேயே தாம் தங்கியிருக்கப் போவதாகவும், தாம் வன்னி யிலேயே உயிர் துறக்க விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

குறித்த அரச சார்பற்ற நிறுவனத்தின் ஏனைய பணியாளர் கள் வவுனியாவிற்கு வந்தடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இத்தாலிப் பிரஜையின் செயற்பாடுகள் குறித்து இத்தாலிய தூதரகமூடாக அந்நாட்டு அரசாங்கத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)



ஆனைக்கோட்டை ஐக்கிய சனசமூக நிலைய அடைக்கலநாயகி முன் பள்ளி வருடாந்த விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட திருமதி பி.சிவலிங்கமும், கௌரவவிருந்தினராக கலந்துகொண்ட றோமன் கத்தோலிக்க பாடசாலை அதிபர் சிறில்சுகந்தரன் ஆகியோர் கொடியேற்றி ஆரம்பித்துவைப்பதையும், மற்றும் விருந்தினர்களாக கலந்துகொண்ட அருட்தந்தை றோஷான் அடிகளார் அறக்கொடை நிறுவன முகாமை யாளர் கெ.கமலநாதன் மற்றும் பிரமுகர் களையும் படத்தில் காணலாம். (படம்:நல்லூர் செய்தியாளர்)

## நிதி ஒதுக்கீடு

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவின் அபிவிருத்திக்காக, யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து ஐந்து இலட்சம்ரூபாஒதுக்கீடுசெய்துள்ளார். (அ-134)

◆◆◆◆

பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவின் அபிவிருத்திக்கென பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். (அ)

## அதிபர்களுக்கான கூட்டம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும் என்று தென்மராட்சி வலய கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் தெரிவித்துள்ளார். (அ-29)

## சிங்கள பாடநெறிகளுக்கான மீள் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கு திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் சிங்க பாட நெறிகளுக்கான ஆரம்பப் பாட நெறி அடிப்படை கற்கை நெறி முதலாவது மீள் பரீட்சை எதிர்வரும் 1ஆம்திகதி புதன்கிழமை காலை 9மணிக்கு கல்வியங்காடு யா/ செங்குந்தா இந்துக்கல்லூரியில் நடைபெறும்.

இப்பரீட்சைக்க அனைத்து மாணவர்களையும் பங்குபற்றுமாறு இணைப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளர்.

## தரம் 5 புலமைப்பரிசில் பெறுபேறுகள்

**யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி அச்சுவேலி**

ம.அமலன்-148, ச.மாதங்கி-145, இ.டர்ஷி-129,த.யனுசிகா-129, அ.யதீசன்-123, உ.பாணுயா-120,செ.சுஸ்மிதா-119, ம.கலைமதி-118, சி.அர்வனா-116, அ.ஜோய்மனாசே-116, சி.சாரங்கன் -114,சோ.ஶ்ரீவக்சன்-114

**வல்வை சிவகுரு வித்தியாசாலை**

ப. கோபிநாத்-127, செ. விதுஷன்-121, உ. தனுஷா -118.

**நல்லூர் ஆனந்த வித்தியாலயம்**

த. நீராஜா-114. (அ)

## தேசிய வாசிப்பு மாத செயற்திட்டங்கள்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் மனிப்பாய் கிராம உப அலுவலக பொது நூலகத்தினால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பின்வரும் செயற்திட்டங்கள் நடத்தப்படவுள்ளன.

◆ 2 ஆம் திகதி வியாழக்கிழமை அதிஷ்டலாபச் சீட்டுவிற்பனை

◆ 3,4,5 ஆம் திகதிகளில் நூல்களின் கண்காட்சியும் புதிய அங்கத்தவர் சேர்க்கையும்.

◆ 6 ஆம் திகதி திங்கட்கிழமை சரஸ்வதி பூஜை

◆ 16ஆம் திகதி வியாழக்கிழமை ஒரு புத்தகம் ஒரு சமூதாய நிகழ்வு .

◆ 23 ஆம் திகதி வியாழக்கிழமை முன்பள்ளிகளுக்கான இறுவட்டு வெளியீட்டுவிழா.

◆ 30ஆம் திகதி வியாழக்கிழமை நூல் மூது சஞ்சிகைவெளியீடு. (அ-6)

## வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட வண்ணார் பண்ணை பிரதேச வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி(A.R.V)இன்று திங்கட்கிழமை காலை 9 மணிமுதல் 12 மணிவரை கீரிப்பிள்ளையார் கோவிலடியிலும் பிற்பகல் 2 மணி முதல் 3.30 மணி வரை ஐயனார் கோவிலடியிலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு இத் தடுப்பூசியினை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் கேட்டுக்கொண்டுள்ளார். (அ)

# தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தல்

(காரைநகர்)

காரைநகர் பிரதேசத்தில் வாழும் 16 வயதிற்கு மேற்பட்ட தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்காத அனைவரையும் உடனடியாக விண்ணப்பிக்கும் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் ஒலிபெருக்கி மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ் அறிவுறுத்தலில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

தேசிய அடையாள அட்டை என்பது இன்றைய கால கட்டத்தில் இன்றியமையாத ஒன்றாகிவிட்டது. நிர்வாக நடைமுறைகள், பாதுகாப்பு நடவடிக்கைகள், வங்கி நடவடிக்கைகள் போன்ற சகலவித அத்தியாவசிய தேவைகளுக்கும் தேசிய அடையாள அட்டை முக்கியமாக தேவைப்படுகிறது. ஆதலால் உடனடியாக தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்காதவர்கள் தங்கள் பிரிவு கிராம சேவையாளர் ஊடாக விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பதற்கு தேவையான பிறப்புச் சான்றிதழ் மற்றும் ஆவணங்கள் இல்லாதவர்களும் உடனடியாக கிராம சேவையாளர்களை அணுகுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ-246)

# நூலக விழிப்புணர்வு தொடர்பான போட்டிகள்

(சாவகச்சேரி)

குடாநாட்டுப் பாடசாலை மாணவர்களிடையே நூலக விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் நூலக விழிப்புணர்வு நிர்வாகத்தால் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. நூலகப் பயன்பாடு, வாசிப்பு, ஆவணப்படுத்தல், ஆக்கத்திறன், சுய ஆளுமைத்திறன் ஆகியவற்றை மாணவர்களிடையே மேம்படுத்தும் நோக்கில் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் ஓர் அங்கமாக பாடசாலைகளுக்கிடையே நூலக விழிப்புணர்வு தொடர்பாக கட்டுரை, பொது அறிவு , பேச்சுப் போட்டிகள் அடுத்த மாதம் நடாத்தப்படவுள்ளன.

இதுதொடர்பான அறிவுறுத்தல்களும் விண்ணப்பப்படிவங்களும் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று நிர்வாக தலைவர் அ.சிறிகாந்தலஷ்மி தெரிவித்தார். (அ-29)

# விலங்கு விசர் நோய் தொடர்பான நலத்துறைச் செய்திகள்-நாள் 2

◆ Rhabado Virus எனப்படும் ஒரு வகை வைரஸ் கிருமியால் இந்நோய் ஏற்படுத்தப்படுகிறது.

◆ நோயரும்புகாலம் 1-3 மாதங்கள்

◆ சில வேளைகளில் 2 வருடங்கள் வரை)

◆ நோய்க்காவி - பிரதானமாக நாய் அரிதாக பூனை, குரங்கு ,கீரி,ஓநாய், நரி, வெளவால் ,மாடு

◆ மனிதன் → மனிதன் மிக அரிது (உறுப்பு மாற்று சத்திரசிகிச்சை மூலம்)

◆ நரம்புத்தொகுதியைத்தாக்கி மரணத்தை ஏற்படுத்துகிறது.

◆ நோய்த்தொற்றுக்குள்ளான விலங்கினது உமிழ்நீரில் வைரஸ் கிருமிகள் செறிந்து காணப்படும்.

◆ நோய் தொற்றுக்குள்ளான விலங்கு கடிக்கும் போது அல்லது மென்சவ்வுள்ள பிரதேசத்தில் நக்கும்போதும் அல்லது வேறு வழிகளில் உமிழ்நீர் இரத்தத்துடன் நேரடியாக தொடுகையுறும் போது தொற்றை ஏற்படுத்துகிறது.

◆ நோய்க்கிருமி தொற்றினால் நரம்புத் தொகுதியில் பெருக்கமடைந்து மூளையைத் தாக்கி மரணத்தை ஏற்படுத்துகிறது.

◆ நோய் அறிகுறிகள் ஏற்பட்டால் மரணம் நிச்சயம். ஆனால் தடுப்பு மருந்து ஏற்றுவதன் மூலம் இந்நோய் ஏற்படாது பாதுகாத்துக் கொள்ள முடியும். (அ)

# தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த மேலும் 16 பேருக்கு சுயதொழில் உதவி

(சாவகச்சேரி)

சுயதொழில் உதவி கோரி சமூக சேவைகள் திணைக்களத்திற்கு விண்ணப்பித்த தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த மேலும் 16 பேருக்கு இன்று தென்மராட்சிப் பிரதேச செயல சமூக சேவைகள் பிரிவில் காசோலை வழங்கப்படவுள்ளது.தெரிவு செய்யப்பட்டவர்களை தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை சகிதம் வந்து காசோலையைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்டவர்களின் விபரம் வருமாறு,

இரத்தினம் சரஸ்வதி -சரசாலை தெற்கு, மகாலிங்கம் புஸ்பராணி-மீசாலை கிழக்கு, ரவிந்திரராசா தங்கேஸ்வரி- மீசாலை கிழக்கு, சின்னையா செல்லம்மா-சாவகச்சேரி சிவன் கோவிலடி, எனிஸ்பான் லெட்சுமி- மீசாலை வடக்கு, சின்னத்தம்பி சிறிவதனா- மந்துவில் கிழக்கு ,முருகன் சீதேவி-கள்ளி நகர் கைதடி,சுதர்சன் பத்மாவதி-கச்சாய் வீதி , சாவகச்சேரி,

திருநாவுக்கரசு யோகாம்பாள் -கைதடி தென்கிழக்கு, கந்தசாமி ஈஸ்வரி கைதடி மேற்கு, பரம்லெட்சுமி-குடமியன், பேரின்பநாயகம் செல்வராணி -பெரிய அரசடி, கந்தையா தர்மலிங்கம் கைதடி தெற்கு , கணேசமூர்த்தி பரமேஸ்வரி -குடமியன், சிறி மகேஸ்வரி - குடமியன், விஜயகுமார் பர மேஸ்வரி - சரசாலை தெற்கு (அ-29)



பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் பருத்தித்துறை ஶ்ரீ இ ர ா ம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் சத்துணவுத் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் மாணவிகளுக்கு பசுப்பால் வழங்கி திட்டத்தை ஆரம்பித்து வைப்பதையும், அருகில் சுவாமி சித்ரூபானந்தா நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்:-பரு.நிருபர்)

## சுயதொழில் ஊக்குவிப்புக்கு யு.என்.டி.பி. நிதி உதவி

ஆவரங்கால் விவேகானந்தா சனசமூக நிலையம் சார்ந்த பகுதி மக்களின் சுயதொழில் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் தோல் உற்பத்தி தொழிற்சாலை ஒன்று யு.என்.டி.பி. நிறுவனத்தின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனம் இதற்கு என ஐந்து இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.தோல் உற்பத்தி சுயதொழிலில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் தொழிலை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. (அ-134)

## ஜெயந்தி தினம்

(யாழ்ப்பாணம்)

ஶ்ரீ இராமகிருஷ்ண சமிதியினால் சுவாமி அகண்டானந்த ஜெயந்திதினம் இன்று மாலை 5. 30 மணிக்கு சமிதி மண்டபத்தில் கொண்டாடப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பஜனை விசேட ஆன்மீக உரை தீபாராதனை என்பன இடம்பெறும்.(அ-6)

## நவராத்திரி விழா

தெல்லிப்பளை ஶ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நவராத்திரி விழா் நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி 9 ஆம் திகதி வியாழக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு ஸ்நபன அபிஷேகம் ஆரம்பமாகும். 12 மணிக்கு கும்பம் வைக்கப்படும்.

9 ஆம் திகதி வியாழக்கிழமை விஜயதசமி விழாவில் காலை 7 மணி பூசை, 8 மணிக்கு வசந்த மண்டபப்பூசையும் அம்பாள் எழுந்தருளலும், 9மணிக்கு வன்னி வாழை வெட்டலும் (மானம்பு உற்சவம்), 10 மணிக்கு வித்தியாரம்பமும் (ஏடு தொடக்கல்) நண்பகல் 12 மணிக்கு கேதார கெளரி விரத ஆரம்ப நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (அ)

◆◆◆◆

நீர்வேலி தெற்கு ஒல்லை வேம்படி ஶ்ரீ ஞானவைரவர் தேவஸ்தான நவராத்திரி விழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்களும் விசேட பூஜை, வழிபாடுகள் நடைபெறவுள்ளது. (அ-6)




## பேச்சுப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

இளந் தலைமுறையினிடையே பேச்சாற்றலை வளர்க்கும் முகமாகவும் தமிழுக்குப் பணி செய்து நம் மத்தியில் பரவலாக அறியப்படாமல் உள்ள பெரியார்களை வெளிக் கொணரும் முகமாகவும் திருமறைக் கலாமன்றத்தால் அண்மையில் நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதற்கமைவாக முதலாம் இடத்தை அளவெட்டி வடக்கு அளவெட்டியைச் சேர்ந்த செல்வன் இரத்தினசிங்கம் சர்வேஸ்வராவும் இரண்டாம் இடத்தை இல.15,யாழ். வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்வன் தெய்வேந்திரன் ஹர்சனும் பெற்றுள்ளார்கள். இவர்களுக்கான பரிசில்கள் எதிர்வரும் டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி திருமறைக்கலாமன்றத்தால் நடத்தப்படவுள்ள பரிசளிப்பு விழாவின் போது வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது பேச்சுப் போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றிய அனைவருக்கும் ஊக்குவிப்புப்பரிசுகளும் வழங்கப்படவுள்ளது. (ஓ)

## யாழ்ப்பாணக் கல்லூரியின் விஞ்ஞான தினம்

யாழ்ப்பாணக் கல்லூரி விஞ்ஞான மன்றத்தினரால் வருடா வருடம் நடாத்தப்படும் விஞ்ஞான தினம் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு விஞானக் கண்காட்சியுடன் ஆரம்பமாகி தொடர்ந்து ஆவிகளின் மாயாஜாலக் காட்சிகளும் காண்பிக்கப்படும். தொடர்ந்து ''அறிவியலருவி'' மாணவர் விஞ்ஞான சஞ்சிகை வெளியீடும் இடம் பெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனத்தின் இயக்குநர் என். ஆர்.ஜீ.கூல் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (அ-27)

# நோத்முதல் கோபல்லவா வரை (112)



### மனிங் காலத்து முதற்றிருத்தம்

அதனால் தமிழர் தங்கள் முன்னேற்றத்துக்குச் சிங்களவரை மேலும் நம்பி இருப்பதில் பிரயோசனம் இல்லை எனக் கண்டு இலங்கையில் உள்ள ஏனைய சிறுபான்மையினருடன் கூட்டுச் சேர்ந்தனர். அதிலே அவர்கள் சட்டசபையின் பிரதிநிதித்துவ பலம் எப்படி இருத்தல் வேண்டும் எனத் திட்டமிட்டனர்.

சட்டசபையில் உள்ள ஒவ்வொரு மூன்று சிங்களப் பிரதிநிதிகளுக்கும் தமிழர் பக்கத்தில் இரண்டு பிரதிநிதிகள் இருத்தல் வேண்டும். அத்தகைய அமைப்பு ஆள்புல வாரியால் கிடையாது. அது வகுப்பு வாரியா கவே சாதிக்கக்கூடியது. ஆகவே தமிழர் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவத்தில் நம்பிக்கை வைத்தார்கள். தொட்டிலையும் ஆட்டிப் பிள்ளையையுங் கிள்ளிவிடும் வேலை வினை கெட்ட ஆயாபோல ஆள்பதி அவர்கள் தமிழருக்கும் தன் ஆதரவைத் தருவதாக வாக்க ளித்தார். அதனால் ஆள்பதியின் பணிக் குழு ஆட்சி அசையாமல் நடைபெறும் என அவர் கருதினார் போலும்.

இவ்வாறு ஆள்பதி அவர்கள் இருபக்கத்தாருக்கும் இதமாகக் கூறியதை இலங்கையர் நம்பினார்கள். இருபக்கத்தாரும் நல்லிணக்கம் இல்லாமல் ஆள்பதியின் இதமான பேச்சை நம்பிப் பச்சை மண்ணும் சுட்ட மண்ணும்போல ஒட்டாமலே சட்டசபையில் இருந்தார்கள். ஆள்பதி தன் காரியத்தை நிறைவேற்றிக் கொண்டார்.

முன்னர் படித்த இலங்கையர் பிரதிநிதி

**மீள் பார்வை**

யாவதற்கு சேர் இராமநாதன் அவர்களுடன் போட்டியிட்டுத் தோற்ற வைத்திய கலாநிதி சேர். மாக்கஸ் பர்ணாந்து அவர்கள் 1917 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் சட்ட சபையின் கரைநாட்டுச் சிங்களவர் பிரதிநிதிகளிருவருள் ஒருவராய் நியமிக்கப்பட்டார் .அவர் பிரதிநிதியானதும் இராமநாதன் அவர்களுடைய முயற்சிகள் எல்லாவற்றுக்கும் தமது பூரண ஆதரவைக் கொடுத்து வந்தார். தலைசிறந்த வைத்திய நிபுணர் என்ற மேம்பாடு மாத்திரமன்றி விவசாயம், வங்கி இயல் ஆகியவற்றிலும் நிபுணராயிருந்தார். அவருடைய தகவுரையின் வண்ணமே இலங்கை வங்கி நிறுவப்படலாயிற்று. அவர் சட்டசபையில் இருந்து அரிய சேவை செய்த காலத்திலே சட்ட நிர்வாக சபையிலும் நியமிக்கப்பட்டு ஆள்பதி அவர்களின் ஆலோசனைச் சபையில் தனியிடம் பெற்றார்.

ஆள்பதி மனிங் அவர்களுடைய முதலாவது திருத்தத்தின் வண்ணம் 1920 ஆம் ஆண்டில் அமைந்த சட்டசபை அமைப்புக்கு முன்னர் சிங்களருவருக்கு எத்தனை ஆசனங்கள் கிடைத்தனவோ அத்தனை ஆசனங்கள் தமிழருக்கும் கிடைத்திருந்தன. ஆனால் 1920 ஆம் ஆண்டு திருத்தத்தின் பயனாகச் சிங்களவருக்கு 13 ஆசனங்களும் தமிழருக்கு மூன்று ஆசனங்களுமே கிடைத்தன. எனவே தமிழர் தேசிய மகாசபையை விட்டு விலகித் தமக்குச் சிங்களவருடைய ஆசனத் தொகையில் மூன்றில் இரண்டு பகுதியாயினும் வழங்குமாறு கோருவாராயினர்.


### பொறுப்பில்லாத சட்டசபை

ஆள்பதி மனிங் அவர்கள் கேட்டுக் கொண்ட வண்ணம் தேசிய மகாசபையினர் தங்கள் ஒத்துழையாமைப் போக்கைக் கைவிட்டுத் திருத்தப்பட்ட சட்டசபையில் அங்கம் வகித்துக் கொண்டே மேலுந் திருத்தங்கள் செய்வதற்குக் கிளர்ச்சி செய்வாராயினர். தேசிய மகா சபையினரின் சுயநலப் போக்கும் ஓரினக் கொள்கையும் இப்போது அம்பலமாயின. சிறுபான்மையினர் மேலும் சிங்களவரை நம்பியிருப்பதில் நன்மையில்லை எனக் கருதித் தங்கள் சார்பில் சீர்திருத்த நினைவேடு ஒன்றைத் தயாரித்து ஆள்பதி அவர்கள் மூலம் குடியேற்ற மந்திரியாருக்கு அனுப்பினார்கள். சிறுபான்மையினருடைய நினைவேட்டுக்கும் தகவுரை எழுதி அனுப்பிய ஆள்பதி மனிங் அவர்கள் தொட்டிலையும் ஆட்டிப் பிள்ளையையுங் கிள்ளிவிட்டார் என்பது நாளடைவில் தெரியவந்தது. சீர்திருத்தங் கோரி இதுகாறும் தோளோடு தோளாக நின்ற சிங்களவரும் தமிழரும் வெவ்வேறு பாதைகளில் பிரிந்து அடியெடுத்து வைப் பாராயினர்.

தேசிய மகாசபையினர், அருணாசலம் அவர்கள் விரும்பிய கொழும்புத் தமிழர் தொகுதியை வகுப்பு வாரித் தொகுதி என்பதற்காக ஆதரிக்கவில்லை. ஆனால் அவர்கள் அருணாசலம் அவர்களை வேறெந்தத் தொகுதியிலாவது போட்டியில்லாமல் தெரிவு செய்வதாக வாக்குறுதி கூறினர். ஆனால் அருணாசலம் அவர்கள் மனோ பாவம் வேறாக இருந்தது. அவருக்குப் பிரமாணம் பிரமாணமாகவிருத்தல் வேண்டும் என்ற மனோபாவம் இருந்தது. மூன்று தொகுதிகள் உள்ள மேல் மாகாணத்தில் முதலில் அவருக்கு வாக்குப்பண்ணி வகுத்த


**க.சி.குலரத்தினம்**

தொகுதி இடையில் ஏற்பட்ட ஊடல்களால் மாற்றியமைக்கப்படுவதை அருணாசலம் அவர்கள் விரும்பவில்லை. இன்று கொழும்பு மத்தியில் வகுப்புவாதமில்லாமல் உள்ள முக்கூட்டுத் தொகுதி முறையையும், கொழும்பு தெற்கில் உள்ள இரட்டைத் தொகுதி முறையையும் பெரியவர்கள் அன்று விளங்கிக் கொள்ளவில்லை. (தொடரும்)









பருத்தித்துறை மத்திய மருந்தக புதிய மாடிக் கட்டடத் திறப்பு விழாவை பிரதமவிருந்தினரான யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் மங்கல விளக்கேற்றி ஆரம்பிப்பதையும், யாழ்.மேலதிக அரச அதிபர் ஏ.சிவசுவாமி, பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன், யாழ். கட்டடத் திணைக்கள பிரதம பொறியியலாளர் கே.குகநேசன் ஆகியோர் நிற்பதையும், விழாத்தலைவர் வின்சென்ற் டிபோல் தலைமையுரை நிகழ்த்துவதையும், யாழ்.பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ.கேதீஸ்வரன், பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் ஆகியோர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:பரு.நிருபர்)

# எமது பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்கள் சமூக ஒற்றுமையை உருவாக்க உதவவேண்டும் (1)



நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் யாழ்ப்பாணக் குடாநாட்டில் நடைபெற்று வரும் கலாசார நிகழ்வுகள் எமது பண்பாட்டில், பாரம்பரிய வாழ்க்கை முறையில் ஆர்வத்தையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்தவேண்டும் என்ற உன்னத நோக்கோடு நடாத்தப்படுவதாக எண்ணுகிறேன். அவற்றை முன்னெடுத்துச் செல்வதற்காக நடாத்தப்படும் பாரம்பரிய கலைநிகழ்வுகளையும், கண்காட்சிகளையும், இலக்கிய விமர்சனங்களையும், விவாத மேடைகளையும் பார்த்து எமது பண்பாட்டை நேசிக்கும் யாரும் மகிழ்ச்சியடையாமல் இருக்கமுடியாது.

இத்தகைய கலாசார நிகழ்வுகளை உற்சாகப்படுத்தும் நோக்கில் எம் நாட்டுப் பத்திரிகைகளும், வெகுசனத் தொடர்புச் சாதனங்களும், கருத்து வேறுபாடுகளை மறந்த நிலையில் அனைத்துப் பிரிவு மக்களும் ஒன்றிணைந்து செயற்படுவது மன நிறைவை அளிப்பதாக உள்ளது. இந்த ஊக்கத்திற்கும், உற்சாகத்திற்கும் பல காரணங்கள் இருக்கலாம். இருப்பினும், எனது பார்வையில் சமகால அனர்த்தத்தில் எம்மை விட்டுத் தொலைந்துபோக இருந்த எமது பாரம்பரிய பண்பாட்டை தொடர்ந்தும் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்ற மக்களின் அதங்கமே இவ்வாறான கலாசார நிகழ்வுகள் என்றும் இல்லாதவாறு மக்களிடையே எழுச்சி பெறக் காரணம் என எண்ணுகிறேன். ஏனெனில் எமது தமிழர் சமூகத்தில் குடும்ப உறவிலும், சமூக உறவிலும் சில தனித்துவமான பழக்கவழக்கங்கள், பண்பாடுகள், பாரம்பரிய மரபுகள் உண்டு. அவை குடும்பம், கிராமம், வட்டாரம், பிரதேசம் என்ற அடிப்படையில் தனித்தும், ஒன்றிணைந்தும் பாரம்பரியமாகப் பேணப்பட்டு வந்திருக்கின்றன.

அவற்றை எமது சமூகம் தமது வாழ்க்கை வட்டத்திற்குள் உயர்ந்த சொத்தாகவும், கௌரவத்திற்குரிய அடையாளமாகவும் பார்க்கின்றன. அவற்றைத் தொடர்ந்து பேணிப் பாதுகாத்துக் கொள்வதில் பெருமையும் அடைகின்றனர். ஏனெனில் அவற்றைப் பின்பற்றி வாழ்ந்த போது சமூகத்தில் அமைதியிருந்தது, அன்பு நிலவியது, ஒற்றுமை வளர்ந்தது, மனித கௌரவம் மதிக்கப்பட்டது, வாழ்வில் மகிழ்ச்சி காணப்பட்டது. ஆனால் கடந்தகால அனர்த்தங்களாலும், இடப்பெயர்வுகளினாலும் துன்பமான வாழ்க்கையே தொடரும் என எண்ணிய எம் மக்களுக்கு தமது வாழ்வுடன் இணைந்த பாரம்பரியப் பண்பாட்டு அடையாளங்கள் சிதைத்துவிடும் என்றஅச்சத்தை உண்டாக்கியுள்ளது. பல இழப்புக்கள் மத்தியிலும் அவர்களின் பண்பாட்டு இழப்புக்கள் அவர்களின் அமைதி நிறைந்த வாழ்வாதாரத்தில் மிகப் பெரிய துன்பமாக இருந்து வருகிறது. இந் நிலையில் எமது பிரதேசத்தில் நடாத்தப்பட்டு வரும் கலாசார நிகழ்வுகள் எமது சமூகத்தை விட்டு விலகி செல்லவிருந்த பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்களை, வாழ்வியற் கோலங்களை ஒருதரம் மீட்டெடுத்து அவற்றுக்கு புத்துயிரளித்து தொடர்ந்தும் அவற்றை பாதுகாக்கக் கூடிய நம்பிக்கை தரும் ஒரு நிகழ்வாக இன்றைய கலாசார நிகழ்வு களை மக்கள் பலரும் நம்புகின்றனர். மக்களின் இந்த நம்பிக்கையை முன்னெடுத்து வளர்க்கும் உயர்ந்த இலட்சியத்தோடே இக் கலாசார நிகழ்வு அமையவேண்டும் என்பதும் எம்மெல்லோரினதும் விருப்பமாகும்.

*பேராசிரியர் க.கந்தசாமி அவர்கள் கடந்த மூன்றாண்டு காலமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புக்கள் பீடத்தின் பீடாதிபதியாகக் கடமையாற்றிய போது உயர் கல்வியின் தரத்தை உயர்த்தி அதன் கல்விப் பரப்பை அகலப்படுத்தியதன் மூலம் பல கல்வியாளர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர். விஞ்ஞானப் பேராசிரியரான அவர் எமது மதம், மொழி, பண்பாடு,மக்கட் புவியியல்,பிரதேச அபிவிருத்தி,திட்டமிடல், நிர்வாக முகாமைத்துவம், கல்வியியல் முதலான பாடநெறிகளை உயர்பட்டப் படிப்பு பாடநெறிகளாக அறிமுகப்படுத்தி கல்விச் சமூகத்தின் மத்தியில் உயர் கல்வியின் விழுமியங்களுக்கு புதுவழிகாட்டிய ஒரு கல்வியியலாளர். அண்மையில் அவர் தென்மராட்சி கலாசார விழாவில் சமூக நல்லிணகத்தையும்,வாழ்வியல் ஒழுக்கத்தையும் நெறிப்படுத்துவதில் எமது பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்களுக்குரிய பங்கையும், எமது பண்பாட்டு விழுமியங்கள் பாதுகாக்கப் படவேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தி ஆற்றிய நீண்ட உரையின் சுருக்கம் வாசகர்களின் நன்மை கருதி வலம்புரியில் வெளிவருகிறது.*

### தென்மராட்சியின் தனித்துவம்

தமிழர் பிரதேசத்தில் தென்மராட்சிக்கென தனித்துவமான பண்பாடும், பழக்கவழக்கமும், பாரம்பரிய வாழ்க்கை முறை என்பன உண்டு. குடாநாட்டின் ஏனைய இடங்களில் மறைந்து போகின்ற தமிழரின் நாகரிகப் பண்புகள் பலவற்றைத் தொடர்ந்தும் பாதுகாத்து வரும் பெருமை தென்மராட்சி மக்களுக்கு உண்டு. இப் பண்பு தென்மராட்சி மக்களிடம் 2000 ஆண்டுகால வாழ்க்கை வரலாற்று அனுபவத்திலிருந்து வளர்ந்த ஒன்று. இவற்றையெல்லாம் இப் பிரதேசத் திற்குரியவன் என்ற பெருமையில் நான் மிகைப் படுத்தி கூறுவதாக எண்ணவேண்டாம். அவை எனக்கு தென்மராட்சி வரலாறு சொல்லிவந்த பாடங்கள். ஏனெனில் இற்றைக்கு 2000 ஆண்டு களுக்கு முன்னரே தென்மராட்சியில் உள்ள இயற்றாலையும், கச்சாய் துறைமுகமும் பல இன மக்கள் ஒன்று கூடிய இடமாக வரலாற்று இலக்கியங்களில் பதியப்பட்டிருக்கிறது. (தொடரும்)

**பேராசிரியர் க.கந்தசாமி**
பௌதீகவியல் பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# அணுசக்தி தொழில் நுட்பத்தை வெனிசுலாவுக்கு வழங்குவோம்

## ரஷ்யா அறிவிப்பு

அமெரிக்காவுக்கு எதிராக பேசி வரும் சாவெஸ் தலைமையிலான குழு வெனிசுலா நாட்டுக்கு அணுசக்தி தொழில் நுட் பத்தை வழங்குவதற்கு தயாராக இருக் கிறோம் என்று ரஷ்யா அறிவித்துள்ளது.

**அமெரிக்காவை கோபப்படுத்தும்**

அணு ஆயுதப்பரவலை தடுப்பதற்காக உலக நாடுகள் முயற்சி செய்து வரும் நிலையில் ஈரான் நாடு மின் உற்பத்திக்காக அணு ஆராய்ச்சியை ஈடுபட்டது.

இதற்கு அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் எதிர்ப்புத்தெரிவித்து வருகின்றனர். ஈரான் நாட்டுக்கு அணு சக்தி தொழில் நுட்பத்தையும் யுரேனியத்தையும் வழங்கி யது ரஷ்யா தான். இப்போது அமெரிக் காவுக்கு எதிராக தன்னை காட்டிக்கொள்ளும் வெனிசுலா அதிபர் சாவெஸ்சுக்கு அணு மின் உற்பத்திக்கு உதவப்போவதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

இது அமெரிக்காவுக்கு பெரும் கோபத்தை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகம் இல்லை. அமெரிக்காவின் எதிரியாக தன்னை காட்டிக் கொள்ளும் சாவெஸ் அமெரிக்காவின் எதிரி நாடான கியூபாவின் தலைவர் காஸ்ரோவுடன் நெருக்கமாக இருந்து வருகிறார்.

வெனிசுலா நாடு பெற்றோல் ஏற்றுமதியில் முக்கியமான இடத்தை வகிக்கின்றது. அந்தநாட்டு அதிபர் சாவெஸ் ரஷ்யாவில் சுற்றுப் பயணம் செய்து வருகிறார். அவர் மாஸ்கோவில் பிரதமர் புடினை சந்தித்துப் பேசினார். அப்போது அனுமதிக்கான அணுசக்தி துறையில் வெனிசுலாவுக்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று அறிவித்தார்.

கண்டித்தது முதல்

அண்டை நாடான ஜோர்ஜியாவில் இராணுவத் தலையீடு செய்வதற்காக ரஷ்யாவை அமெரிக்கா கண்டித்தது முதல் வெனிசுலா நாட்டுடன் ஒத்துழைப்பை ரஷ்யா பலப்படுத்தி வருகிறது.

போர் விமானங்களை வெனிசுலாவுக்கு ரஷ்யா விற்றது கூட்டு இராணுவ ஒத்திகைக்காக தன் போர்க்கப்பல்களை கரீபியன் கடற் பகுதிக்கு ரஷ்யா அனுப்பியது.

இந்நிலையில் தான் சாவெஸ் ரஷ்யாவுக்கு இரண்டு நாள் சுற்றுப்பயணமாக சென்றிருக்கிறார். இந்த பயணத்தின் போது வெனிசுலாவுக்கு ஆயுத விற்பனை செய்வது பற்றியும் பரிசீலிப்போம் என்று புடின் அறிவித்தார். பிரதமர் புடினை நண்பர் புடின் என்றும் சாவெஸ் அழைத்தார். (அ-6)

# கார் குண்டு வெடிப்பில் சிரியாவில் 17 பேர் பலி

(டமாஸ்கஸ்)

சிரியா நாட்டின் தலைநகர் டமாஸ்கஸ் விமானநிலைய வீதி அருகே ஒருசோதனைச் சாவடி பகுதியில் ஒரு காரில் நிரப்பி வைக்கப்பட்டிருந்த குண்டுகள் பயங்கர சத்தத்துடன் வெடித்தது. இதில் 17 பேர் பலியானார்கள் .14 பேர் காயமடைந்தார்கள்.

அந்தக்காரில் 200 கிலோ வெடிமருந்துவைக்கப்பட்டிருந்ததாக சிரியா நாட்டு தொலைக்காட்சி அறிவித்தது.

குண்டு வெடித்த பகுதியில் ஈரான் லெபனான் நாடுகளில் இருந்து அதிக அளவில் யாத்திரிகர்கள் வந்து செல்லும் சிட் ஜெனாப் என்ற வழிபாட்டுத் தலம் உள்ளது குறிப்பிடத்தக்கது.

குண்டு வெடித்த இடத்தை உடனடியாக முற்றுகையிட்ட பாதுகாப்பு படையினர் தாக்குதலில் ஈடுபட்ட தீவிரவாதிகளைத் தேடி வருகின்றனர். (அ-5)

# வியட்நாம் நாட்டில் புயல் மழைக்கு 21 பேர் பலி

(ஹனோய்)

வியட்நாம் நாட்டில் வட பகுதியை ஹகுபிட் என்ற புயல் தாக்கியது. அப்போது பலத்த மழை பெய்தது. புயல் -மழையில் ஆயிரக் கணக்கான வீடுகள் நாசமாகின. பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டது.

இந்தப் புயல் -மழைக்கு 21 பேர் பலியானார்கள். மீட்புப்பணியில் மூவாயிரத்து 400 இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்னர். அவர்கள் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தினார்கள். மீட்புப்பணிகள் தொடர்ந்து முடுக்கி விடப்பட்டுள்ளன. (அ-6)

# குண்டுத் தாக்குதலுக்கு சனிக்கிழமை தெரிவு !?

டெல்லியில் கடந்த 13ஆம் திகதி நடந்த குண்டு வெடிப்பும் நேற்று முன்தினம் நடந்த குண்டு வெடிப்பும் சனிக்கிழமை நடந்துள்ளது.

இதேபோல 2005ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 29ஆம் திகதி குண்டு வெடித்தது. அன்றும்சனிக்கிழமைதான் குஜராத் மாநிலம் ஆமதா பாத்தில் கடந்த ஜூலை 26ஆம் திகதி குண்டு வெடித்தது. அன்றும் சனிக்கிழமை தான் என்பது குறிப்பிடத்தக்கது.

தீவிரவாதிகள் பெரும்பாலும் சனிக்கிழமைகளை தேர்ந்தெடுத்தே குண்டு வைக்கின்றனர். இது ஏன் என்று தெரியவில்லை.

# பழுதடைந்த விமானத்தை தள்ளிய பயணிகள்

(பீஜிங்)

சீனாவில் குலின் நகரில் இருந்து சென்சாவே நகருக்கு ஒரு விமானம் சென்றது. அந்த விமானத்தில் 69 பயணிகள் இருந்தன. 500 மைல் தூரம் பறந்து சென்ற அந்த விமானம் சென்சாவே விமான நிலையத்தில் தரை இறங்கியது.

அப்போது விமானத்தின் இயந்திரத்தில் திடீர் கோளாறு ஏற்பட்டது. பழுதடைந்த அந்த விமானம் ஓடு பாதையில் தட்டியபடி நின்று விட்டது. பயணிகள் பகுதிக்குள் வராமல் தள்ளி நின்ற இந்தவிமானத்தில் இருந்து இறங்கிய ஊழியர்கள் விமானத்தை தள்ளினார்கள்.

அதை கொண்டு வரமுடியவில்லை இதனால் பயணிகள் அனைவரும் வழுக்கட்டாயமாக கிழேஇறக்கி விடப்பட்டனர். பயணிகளும் சேர்ந்து கொண்டு அந்த விமானத்தை தள்ளினார்கள் . வீதியில் பழுதாகி நிற்கும் காரை தள்ளுவது போல் அதை தள்ளி விமானம் நிற்கும் பகுதிக்கு கொண்டுவந்தனர்.

விமானத்தை தள்ளிக்கொண்டு வந்து நிறுத்தினால்தான் தங்கள் உடமைகளை எடுக்க முடியும் என்பதால் வேறு வழியின்றி பயணிகள் விமானத்தை தள்ளிக்கொண்டு வந்து சேர்ந்தனர். (அ-5)

# உலக தரிசனம்

# பாகிஸ்தானில் ஒரு மாதத்தில் ஆயிரம் தீவிரவாதிகள் பலி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதியில் கடந்த ஒரு மாத காலமாக நடத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையில் ஆயிரம் தீவிரவாதிகள் பலியானார்கள் பாகிஸ்தானில் வடமேற்கு எல்லைப்புற மாநிலத்தில் பஜாவர் என்ற பகுதியில் தான் பழங்குடியின மக்கள் அதிகளவில் வசிக்கிறார்கள்.

இந்த பகுதியில் தான் தீவிரவாதிகள் பதுங்கி இருக்கிறார்கள் அவர்கள் அந்தப் பகுதியின் கட்டுப்பாட்டை தங்கள் வசம் எடுத்துக்கொண்டுள்ளனர். அவர்கள் பாகிஸ்தானில் தற்கொலைத்தாக்குதல் நடத்தியதாலும் இராணுவ வீரர்களை கடத்தியதாகவும் அவர்களுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை முடுக்கிவிடப்பட்டுள்ளது.

கடந்த ஒரு மாத காலத்தில் மட்டும் ஆயிரம் தீவிரவாதிகள் பலியானதாக இராணுவம் அறிவித்துள்ளது. அவர்களில் 5 பேர் அல் கொய்தா மற்றும் தலிபான் தீவிரவாத இயக்கத்தின் தளபதிகளாவார்கள்.

தீவிரவாதிகளுக்கு எதிராக நடத்தப்படும் நடவடிக்கையை நிருபர்களுக்கு காட்டுவதற்காக அவர்களை ஹெலிகொப்டரில் இராணுவம் அழைத்துச்சென்றது. பஜாவர் பகுதியில் உள்ள கர் என்ற பிரதானநகருக்கு நிருபர்கள் அழைத்துச்செல்லப்பட்டனர். அங்கு எல்லைப்படை இன்ஸ்பெக்டர் ஜெனரல் தாரிக் கான் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

கடந்த ஒரு மாத காலத்தில் நடத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையில் ஆயிரம் தீவிரவாதிகள் பலியானார்கள் என்று அவர் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

தலிபான் அல்கொய்தா இயக்கங்களின் உயர் மட்ட தளபதிகள் 5 பேர் பலியானார்கள். அவர்களில் 4 பேர் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள் எகிப்து நாட்டைச்சேர்ந்த அபுசயீத் அல்மஸ்ரி அரபு இனத்தவரான அபு சுலைமான் உஸ்பெக்கிஸ்தான் நாட்டைச் சேர்ந்த முல்லா மன்சூர் ஆப்கா னிஸ் தான் நாட்டை சேர்ந்த மனாரஸ் ஆகியோர் பலியானார்கள். பாகிஸ்தானைச் சேர்ந்தவர் ஒரே ஒருவர் தான். அவர் பெயர் அப்துல்லா . இவர் மவுல்லி பகீர்.

முகமதுவின் மகன் ஆவார் இவர் அல்கொய்தா இயக்கத்தின் தளபதியான அல் ஜவாஹிரியின் நெருங்கிய நண்பர் ஆவர். இவ்வாறு தாரிக்கான் கூறினார். (அ-6)

# இந்தியாவுடனான அணுசக்தி ஒப்பந்தத்துக்கு அமெரிக்க காங்கிரஸ் ஒப்புதல்

(வோஷிங்டன்)

இந்திய அமெரிக்க நாடுகளுக்கு இடையேயான அணுசக்தி ஒப்பந்தத்திற்கு அமெரிக்க காங்கிரஸ் ஒப்புதல் அளித்துள்ளது. அமெரிக்கா காங்கிரஸில் இது குறித்துநடந்த விவாதத்தில் ஒப்பந்தத்திற்கு ஆதரவாக 298 ஓட்டுக்களும் எதிராக 117 ஓட்டுகளும் கிடைத்தன.

இதனையடுத்து ஒப்பந்தம் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டு அமெரிக்க செனட் சபையின் ஒப்புதலைப் பெற ஒப்பந்தம் அங்கு அனுப்பப்படுகிறது.

பிரதமர் மன்மோகன் சிங் பிரான்ஸ் நாட்டிற்கு புறப்படும் முன் ஒப்பந்தம் நிறைவேறப்படும் வாய்ப்பு அதிகரித்துள்ளதாக அமெரிக்க உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேலும் அடுத்த மாதம் 3ஆம் திகதி இந்தியா வரும் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் கொண்டலீசாரைஸ் முன்னிலையில் 123 ஒப்பந்தம் கையெழுத்திடப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் பத்திரிகையாளர்களைச் சந்தித்த பிரதமர் மன்மோகன்சிங் கூறியதாவது,

அந்த ஒப்பந்தம் நிறைவேறுவதன் மூலம் அமெரிக்கா உடனான உறவு வலுப்பெறும் என்று தெரிவித்துள்ளார். (அ-5)

## டெல்லி குண்டு வெடிப்பு

# உதவி செய்வதாக நினைத்து உயிரை இழந்த சிறுவன்

(புதுடில்லி)

டெல்லியில் நேற்று முன்தினம் நடந்த குண்டு வெடிப்பில் பலியான சிறுவன் குறித்து உருக்கமான தகவல்கள் கிடைத்துள்ளன. பீகாரைச் சேர்ந்த சந்தோஷ்குமார் (வயது 13) என்ற சிறுவன் மெரவுலி பகுதியில் உள்ள ஒரு சாலையோர நொறுக்குத்தீனி கடையில் வேலை பார்த்து வந்தான்.

குண்டு வெடிப்பதற்கு முன் மெரவுலி பூ சந்தை வழியாக மோட்டார் சைக்கிளில் சென்ற இரண்டு மர்ம மனிதர்கள் ஒரு டிபன் பொக்ஸை கருப்பு பையில் சுற்றி கீழே விட்டு விட்டுச் சென்றனர். அதுவெடிகுண்டு என்பதை அறியாத சந்தோஷ் குமார் அதைக் கையில் எடுத்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் சென்ற நபர்களிடம் கொடுப்பதற்கு பின்னாலேயே ஓடினான் ஆனால் அவர்கள் வேகமாக சென்று விட்டனர்.

அதே நேரத்தில் சிறவனின் கையில் இருந்த டிபன்பொக்ஸ் குண்டு பயங்கரமாக வெடித்தது. அதில் சந்தோஷ் படுகாயமடைந்து மருத்துவமனையில் உயிரிழந்தான் இவை அனைத்தும் சில நிமிடங்களுக்குள் முடிந்து விட்டன. அண்ணே அண்ணே உங்கள் பை கீழே விழுந்து விட்டது என்பதுதான் சந்தோஷ் குமாரின் கடைசி வார்த்தைகள் ஆகும். (அ-5)

# டெல்லியில் மீண்டும் வெடித்தது குண்டு

(புதுடில்லி)

இரு வாரங்களுக்கு முன் நடந்த தொடர் குண்டு வெடிப்பின் சோகமும் பரபரப்பும் மறைவதற்குள் தலைநகர் டில்லி மீண்டும் குண்டு வெடிப்பில் அதிர்ந்தது. டில்லியின் தெற்கு பகுதியில் உள்ள சந்தைப்பபகுதியில் நடந்த இந்த கோர சம்பவத்தில் ஒரு குழந்தை உட்பட 2 பேர் பலியாயினர். படுகாயமடைந்த 17 பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து சனிக்கிழமைகளில் நடக்கும் குண்டுவெடிப்புகளைக் கண்டு டில்லி மக்கள் பீதியில் ஆழ்ந்துள்ளனர். தலைநகர் டில்லியில் கடந்த இரு வாரங்களுக்கு முன் நடந்த தொடர் குண்டுவெடிப்பு சம்பவங்களின் பீதி ஓய்வதற்குள்ளாக நேற்று முன்தினம் மீண்டும் ஒரு குண்டு வெடிப்பு சம்பவம் நிகழ்ந்துள்ளது.

தெற்கு டில்லி பகுதியில் உள்ள மெஹ்ரோலி என்ற இடத்தில் உள்ள சிறிய சந்தையில் இந்த பயங்கர சம்பவம் நிகழ்ந்துள்ளது. நேற்று முன்தினம் மதியம் 2.15 மணிக்கு நடந்த இந்த சம்பவத்தில் ஒரு குழந்தை உட்பட 2 பேர் பலியாயினர். படுகாயங்களுடன் 17 பேர் அருகில் உள்ள போர்ட்டிஸ் மற்றும் எய்ம்ஸ் மருத்துவ மனைகளில் சிகிச்சைக் காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பலரது நிலைமை மோசமாக உள்ளது. குண்டு வெடிப்பு சம்பவம் நிகழ்ந்த சில நிமிடங் களில் டில்லி பொலிஸ் கமிஷனர் தாத்வால் உள்ளிட்ட உயர் பொலிஸ் அதிகாரிகள் தடய வியல் நிபுணர்கள் ஆகியோர் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். குண்டு வெடிப்பு சம்பவத்தில் இதுவரை ஒருவர் மட்டுமே பலியாகியுள்ளதாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (அ-5)

# புத்துணர்வூட்டும் படிப்புகள்;புதுமையான வேலைவாய்ப்புகள்

''மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்'' எனக் கூறப்படுவதை கேள்விப்பட்டிருக் கிறோம். அதேபோல், ஒருவரின் வாழ்க்கை அந்தஸ்தை நிர்ணயம் செய்யும் வேலை அமைவதெலாம், அவர் படித்துள்ள படிப்பை பொறு த்து என்பது தான் இன்றைய நிலை. அதனால், நாம் என்ன படிப்பை படிக்கிறோம் என்பதை பொறுத்தே வேலை கிடைக்கிறது. ஊதியத்திற் கேற்ற வேலை, மனதிற்கு பிடித்த வேலை என நமக்கு விருப்பமான வேலை வாய்ப்புக்களை தேர்வு செய்து கொள்ளலாம். அதற்கெல் லாம் அடிப்படை தகுதியாக இருப் பது கல்வி, இத் துறையில் நாள் தோறும் புதிய படிப்புகள் அறிமுக மாகி வருகின்றன. அதேநேரத்தில் மரபு சார்ந்த படிப்புகளும் வேலை வாய்ப்புக்களை அள்ளித்தருகின் றன. அதுபோன்ற ஒரு சில துறைகளை இங்கே பார்க்கலம்.

### ஓஷனோகிராபி

கடலைப் பற்றியும், கடல் வாழ் உயிரிணங்கள்,நீரோட்டம்,கடல்நீரின் இயற்பியில்,வேதியியல் பண்புகள், கடற்காற்று பற்றிய படிப்பே ஓஷ னோகிராபி. ஆழ்கடல், கடல் ஓரங் கள் பற்றிய ஆய்வுகளை ஓஷனோ கிராபர்கள் மேற்கொள்கின்றனர். பின்வரும் 5பிரிவுகளில் ஏதாவது ஒரு பிரிவின் கீழ் ஓஷனோகிரா பர்கள் பணியாற்றுகின்றனர்.

### பிசிக்கல் ஓஷனோகிராபி

தட்பவெப்பம், உப்பு, கடல்நீரின் தன்மைகள்,அதன் அடர்த்தி, கடல் அலைகள், கடற்கரை போன்ற கடல் சார்ந்த இயற்பியல் பற்றிய படிப்பே பிசிக்கல் ஓஷனோகிராபி. கடலும், கடற்காற்றும் தட்பவெப்ப நிலையை எவ்வாறு பாதிக்கிறது என்பது குறித்தும், மாணவர்கள் அறிந்துகொள்கின்றனர். புவிவெப் படைதல், ஓசோன் படலம் குறித்த ஆய்வுகளும் இதில்நடந்து வருகின் றன.

### மரைன் பயலொஜி

கடல் வாழ் விலங்குகள் மற்றும் தாவரங்கள் பற்றிய படிப்பு இது. இவற்றில் சுற்றுச்சூழல் பாதிப்புகள் பற்றியும் மாணவர்கள் அறிந்து கொள்கின்றனர்.



### மரைன் பயோசயின்ஸ்

கடற்கரை, மண்அரிப்பு,கடலின் அடிப்பகுதி, மணல் படிவு போன்ற வற்றை பற்றி ஜியாலாஜிக்கல் ஓஷனோகிராபர்கள்படிக்கின்றனர். இதனால், கனிமப்பொருட்கள் பற்றிய ஆய்வும் மரைன் பயோ சயின்சில் கீழ்நடைபெறுகிறது.

### மரைன் கெமிஸ்ரி

கடலில் உள்ள வேதிப்பொ ருட் கள் பற்றியும், இது கடலை ஒட்டிய பகுதிகளில் ஏற்படுத்தும் சுற்றுச் சூழல் தாக்கம் குறித்தும், கெமிக்கல் ஓஷனோகிராபர்கள் கற்றுக்கொள் கின்றனர். கடல்நீரில் உள்ள மாசு பாட்டை சமாளிப்பதும், இவர்களுக்கு சவாலான காரியமாகவே அமைந் துள்ளது. கடல்வாழ் உயிரினங் களை பயன்படுத்தி மருந்துப் பெருள் ஆய்விலும் இவர்கள் ஈடுபடு கின்றனர்.

### கோஸ்டல் அண்ட் ஓஷன் இன்ஜினியரிங்


கடற்கரை பகுதியில் இன்ஜினி யரிங் தொழில்நுட்பத்தை பயன் படுத்துவது பற்றி இதில் கற்றுத் தரப்படுகிறது. மரைன் சயின்ஸு டன் தொடர்புடைய சிவில் இன்ஜி னியரிங் பிரிவாக இதைக் கருத லாம். துறைமுகங்கள், கடலை ஒட்டிய கட்டுமானங்கள், கடற்கரை பகுதி மேலாண்மை குறித்தும் இதில் மாணவர்கள் கற்றுக்கொள்கின் றனர்.

### சுகர்கேன் டெக்னொலஜி

விவசாயத் துறையில் சிறந்து விளங்கும் நாடுகளில் கரும்பு உற்பத்தி தொடர்பான பிரிவுகளில் வேலைவாய்ப்புகள் அதிகம் உள் ளன. கரும்பு பயிர் ஆய்வு, தர மான கரும்பு உற்பத்திக்கும் உள்ள முக்கியத்துவம் கருதி பல்வேறு நாடுகளில் பல்கலைக்கழகங்கள் சுகர்கேன் டெக்னொலஜி படிப்பு களை அறிமுகப்படுத்தியுள்ளன. இந்தியாவில் தமிழ்நாடு விவசாய பல்கலைக்கழகம், திறந்த நிலை, தொலைதூர(அஞ்சல்) படிப்பாக எம்.எஸ்.சி. சுகர்கேன் டெக்னொல ஜியை அறிமுகம் செய்துள்ளது. கரும்பு பயிர் தொடர்பான ஆய்வு மற்றும் மேம்பாடுகளில் ஈடுபட தேவையான அறிவையும், நிபுணத் துவத்தையும் இந்தப் படிப்பு அளிக் கின்றது.

முதுநிலை படிப்பில் கரும்பு பயிர்வளர்ப்பு, விதை உற்பத்தி, கரும்பில் பயிர் உற்பத்தி தொழில் நுட்பம் மற்றும் இதுதொடர்பான வேதியியல், பிசி யாலஜி படிப்புக ளும் இதில் கற்றுத் தரப்படுகிறது.


சுகர்கேன் டெக் னொலஜி படித்த வர்களுக்கு கரும்புத் தொழிற் சாலைகளில் அதிக வேலை வாய்ப்புக் கள் உள் ளன.



### போட்டே ஜேர்னலிஸம்

பத்திரிகையின் மிக முக்கிய பிரிவுகளில் ஒன்று போட்டோ பிரிவு. இதில், பணியாற் றும் போட்டோ கிராபார்களுக்கு எழுத்து திறனும் அவசியம். பத்திரி கைகளில் வெளியாகும் போட்டோக் கள் பல நேரங்களில் செய்திகளின் முக்கியத்துவத்தை அதிகரிக்கின் றன.

அழகியல் உணர்ச்சியுடன்



படைப்புத்திறனும் உடையவர்க ளுக்கு இது மிகவும் ஏற்ற துறை. வெளிச்சம்,தொலைவு, காட்சியைப் பற்றிய கண்ணோட்டம் போன்ற போட்டோ தொடர்பான தொழில்நுட் பங்களும் கமராவில் உள்ள உபகர ணங்கள் குறித்த அடிப்படை அறிவும் போட்டோ கிராபர்களுக்கு அவசியம்.

பெரும்பாலும் பொழுதுபோக் காக கருதப்படும் போட்டோ கிராபி தேவையான நிபுணத்துவம் உடை யவர்கள் மட்டுமே பணியாக எடுத்து செயல்பட முடியும்.

கலையம்சம் முக்கியத்துவம் வாய்ந்த வேலை இது. காட்சி யமைப்பு,கலர் வடிவ மைப்பு, நிழல், ஒளி போன்றவை போட்டோவில் ஏற்படுத்தும் தாக்கம் குறித்து தெரிந்துகொள்ளவேண்டியது அவசியமாகும்.

போட்டோக்களை மேம்படுத் தும் சொப்ட்வேயர்கள் குறித்தும் போட்டோ கிராபர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

பத்திரிகைத் துறை போட்டோக் களையே பெரிதும் சார்ந்திருப்ப தால் இதில் வேலைவாய்புகள் அதிகம்.

குறிப்பாக போட்டோவில் படைத்திறனை வெளிப்படுத்துப வர்கள் இந்தத் துறையில் முன் னேறும் வாய்ப்புகள் அதிகம்.

ஆர்.யூ.பாலமுருகன்


---

அறிவுக்கலசம்

# தானாக வரும் வைரஸை எப்படி தடுப்பது

நம்மிடையே ஒரு பழமொழி உண்டு. வேலியில் ஓடும் ஓணானை எடுத்து காதிலே விட்டுக்கொண்டு பின் குத்துதே குடையுதே என்றால் என்ன அர்த்தம்? என்று பலரால் சொல்லப்படும்.

பாட்டு, படம் ஏன் முக்கிய பைல் உள்ளது என்று அதனை மாற்ற வேண்டிய ஏதாவது ஒரு சீடியை அதன் டிரைவில் போட்டுவிடு வோம்.



பொதுவாக ஒரு சீடியை டிரைவில்போட் டவுடன் அது தானாக இயங்கி பைல்களின் போல்டர்களைக் காட்டி திறக்கவா எனக் கேட் கும்.பாடல்களுக்கான பைல்கள் இருந்தால் அதனை இயக்கும் அல்லதுஅதிலேஉடன் இயக்கும் வகையில் Auto play/Auto Run என்ற வசதி தரப்டிருந் தால் இயங்கத் தொ டங்கும்.

இந்த வசதி எதனையும் உடனே இன்ஸ் டோல் செய்திடத் தொடங்கும். இங்கு தான் வினையே உள்ளது.

இவ்வாறு நல்ல பைல்களின் இயக்கம் தொடங்குகையில் உடனே வைரஸ் உள்ள சிறிய பைல்களும் கொம்ப்யூட்டருக்கு மாறி அதன் நாச வேலையைத் தொடங்கிவிடும் . ஏன் கொம்ப்யூட்டரில் உள்ள அன்ரி வைரஸ் புரோகிராமினை இயக்கி சீடியில் வைரஸ் உள்ளதா என்று சோதனை செய்திருக் கலாமே என்று எண்ணுகிறீர்களா? இங்கு தான் நம்மை செயல்படவிடாமல்Auto play வைரஸை அனுப்புவது தெரியாமல் அதற்கு வழி அமைத்துக்கொடுக்கிறது.

இதற்கு என்ன செய்திடலாம்? செயல் பாட்டினை நிறுத்திவிட வேண்டியதுதான் எப்படி ? நிறுத்த முடியுமா? என்று தானே கேட் கிறீர்கள்.

கீழ்க்கண்டவாறு செற் செய்திடவும். விண் டோஸ் எக்ஸ்பி சிஸ்டத்தில் மை கொம்ப் யூட்டர் ஜக்கனை கிளிக் செய்து கிடைக்கும் விண்டோவில் உங்கள் சீடி டிரைவிற்கான ஜக்கனில் ரைட் கிளிக் செய்திடுங்கள். அதில் புராபொட்டீஸ் என்பதைத் தேர்ந்தெடுங்கள். இதில்Auto play என்ற டேபினைத் தேர்ந் தெடுங்கள். இங்கே நீங்கள் பயன்படுத் தக்கூடிய பல்வேறு மீடியாக்களுக்கான செட்டிங்ஸ் அமைக்கலம். இதில் இயக்கத் தை நிறுத்திவிட்டால் நீங்கள் பயன்படுத்தும் மீடியா தானாக இயங்காது. ஆனால் இது 100 சதவிகிதம் பாதுகாப்பானதா? என்று கேட்டால் இல்லை என்று தான் சொல்வேன்.

## கணனி உலகம்

ஏனென்றால் வைரஸ் அனுப்பும் ஹேக் கர்கள் இதனையும் மாற்றிவிடும் அல் லது ஏமாற் றிவிடும் வல்லமை படைத் தவர்களாக இருக் கின்றனர். மேலும் ஓட்டோ பிளே இயக்க முடியாமல் செய்திருந்தாலும், பொதுவாக அந்த டிரைவில் டபிள் கிளிக் செய்தால் ஓட்டோ ரன் பைலில் இயக்குவதற்கான கட்டளை இருந்தால் அது தானாக இயக் கப்படும்.

எனவே எந்த சீடி அல்லது பிளாஷ் டிரைவ் போட்டாலும் அதனை உடனே இயக்காமல் வைரஸ் செக் செய்த பின்னரே இயக்க வேண்டும்.

---

# அனைத்தையும் ஓரிடத்தில் வழங்கும் இணையத்தளம்



இவ்வார இணையத்தளம்

இ-மெயில் படிக்க ஒரு இணையத்தளம், செய்திகளை படிக்க ஒரு இணையத் தளம், வீடியோக்களை பார்க்க ஒரு இணையத்தளம், இசை கேட்க ஒரு தளம் எனப்பல்வேறு தளங்களை பயன்படுத்துகி றோம்.

இதனால், ஒரு நாளைக்கு கணிசமான நேரம் செலவா கிறது. இந்தப் பிரச்சினையை போக்கி இ-மெயில், செய்திகள், வீடியோ, இசை என அனைத்து சேவைகளையும் ஒரே இடத்தில் வழங்கும் இணையத்தளமாக www.in.com என்ற தளம் விளங்குகிறது.

உலகச் செய்திகள், இந்திய செய்திகள் என அனைத்து செய்திகளையும் படிக்கலாம். பிரபலமான வீடியோக்கள், இசை ஆல்பங்களை பார்க்கலாம். கேட் கலாம்.

இந்த தளத்தில் உறுப்பினர் ஆவது மூலம் இ-மெயில் முகவரியும் கிடைக்கிறது. அதிலி ருந்து இ-மெயில்களை அனுப்பி பெறலாம். உறுப்பினர் ஆவதன் மூலம் நமக்கு பிடித்தவீடியோக்களையும் சேமிக்கலாம். இப்படி அனைத்து வசதிகளையும் ஒரே தளத்தில் பெறமுடியும்.

# கிளிநொச்சி மீதான தாக்குதலை ஆரம்பிப்பதற்கு முன் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும்

## மன்னார் ஆயர் கோரிக்கை

(கொழும்பு)

கிளிநொச்சி மீதான தாக்குதலை ஆரம்பிப்பதற்கு முன் மக்கள் பாதுகாப்பை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும். அதற்காக மக்கள் பாதுகாப்பு வலயங்களை ஏற்படுத்த வேண்டும் என மன்னார் மாவட்ட மறை ஆயர் அதி வணக்கத்திற்குரிய கலாநிதி ராயப்பு ஜோசப் ஆண்டகை கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐக்கிய நாடுகளினதும் ஏனைய தொண்டு நிறுவனங்களினதும் பாதுகாப்பைக் காரணங்காட்டி கிளிநொச்சியில் இருந்து அவசர அவசரமாக வெளியேற்றியது. ஆனால் வன்னியில் வாழும் இரண்டரை இலட்சத்திற்கு மேற்பட்ட மக்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பு உதத்தரவாதமும் வழங்கப்படவில்லை அவர்கள் இன்று உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு வாழ்வதா சாவதா என்ற மன நிலையில் அந்தரித்து நிற்கின்றனர்.

போரை நடத்தி வெற்றி பெறலாம் அரசியலை நடத்தலாம் ஆனால் அதை அனுபவிக்க மக்கள் உயிரோடு இருக்கவேண்டும் அதற்காக மக்களை பாதுகாத்தே ஆக வேண்டும். உணவு விடயத்தை அரசாங்கமோ புலிகளோ ஓர் ஆயுதமாக பயன்படுத்தக் கூடாது. வன்னிக்கு உணவுப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கு அரசாங்கம் த்டை விதிக்கக் கூடாது.

மூர்க்கத்தனமான விமானத் தாக்குதல்களால் பொதுமக்கள் அநியாயமாக பலியாகின்றனர். குழந்தைகள், சிறுவர்கள் ,பெரியவர்கள் என்ற பேதமில்லாமல் கொல்லப்படுகின்றனர்.

உயிருக்கு உலை வைக்கும் இந்த மிருகத்தனமான செயலை உலக மக்களால் வன்மையாக கண்டிக்கப்படவேண்டும்.

இவ்வாறான செயல்களை தொடர அனுமதிப்பது ஆபத்தாகவே முடியும். சமாதானத்தை விரும்பும் மனித இதயம் உள்ளவர்கள் இதற்கு தமது கடும் எதிர்ப்பை தெரிவிக்க வேண்டும்.

வன்னியில் பொதுமக்கள் பயணிக்கும் வாகனங்கள் கிளை மோர் தாக்குதல் நடத்தப்படுகின்றது.

இதனால் சொந்த மக்களே படுகொலை செய்யப்படுகின்றனர். வவுனியா வடக்கு மாந்தைமேற்கு மடு ஆகிய பகுதிகளில் இருந்து சுமார் 2 இலட்சத்து 10 ஆயிரம் பேர் இடம் பெயர்ந்து வன்னியில் தஞ்சமடைந்துள்ளனர்.

கிளிநொச்சி. முல்லைத்தீவு மாவட்டங்களை சேர்ந்தவர்களுமாக சுமார் மூன்றரை இலட்சம் மக்கள் வன்னியில் இருக்கின்றனர்.

அகதிகளாக வன்னிக்கு சென்ற மக்கள் இன்று மர நிழல்களிலும் குடில்களிலும் அடிப்படை வசதிகள் எதுவுமின்றி மிகவும் பரிதாபகரமான நிலையிலே வாழ்ந்து வருகிறார்கள்.



பலமுறை இடம்பெயர்ந்த அவர்களை விமானங்களில் துரத்தி துரத்தி அடிப்பது எந்த வகையில் நியாயமாகும் இடம்பெயர்ந்த ஆண்கள் மெலிந்த உடலுடன் கைகளில் பைகளை வைத்துக்கொண்டு உணவுக்காக அலைவது மிகவும் பரிதாபகரமான நிலைமை ஆகும்.

விமானங்களைக்கண்டால் சிறியவர் முதல் பெரியவர் வரை தம் உயிரை பாதுகாத்துகொள்ள ஓடி ஒளிந்து கொள்ள வேண்டிய நிலையே இன்று வன்னியில் காணப்படுகிறது. இதனால் அவர்களின் மன நிலை பாதிக்கப்பட்ட மன நோயாளிகள் போலவே நடமாடி திரிகின்றனர். (அ-5)

## இலங்கை மீனவர் 54 பேரை தமிழக அரசு விடுதலை

(சென்னை)

இந்தியக் கடலோர பாதுகாப்புப் படையினரால் கைதுசெய்யப்பட்டிருந்த இலங்கை மீனவர்கள் 54 பேரையும் தமிழக அரசு விடுதலை செய்துள்ளது. இந்தியக் கடல் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்த குற்றஞ் சாட்டின் பேரில் இந்த மீனவர்கள் தூத்துக்குடி, விசாகப் பட்டினம் மற்றும் சென்னை ஆகிய பகுதிகளில் வைத்துகைது செய்யப்பட் டதாக சென்னையின் பிரதி உயர்ஸ்தானிகள் பி.எம். அம்ஷா தெரிவித்தார். நீர் கொழும்பு சிலாபம் மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களே இந்தியக் கரையோர பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

விடுதலை செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் தொடர்பில் சென்னையிலுள்ள இலங்கையின் பிரதி உயர்ஸ்தானிகர் பி.எம். அம்ஷா குறிப்பிடுகையில்.

இதுவரை54 இலங்கை மீனவர்கள் தென்னிந்தியாவிலே தடுத்து வைக்கப் பட்டிருந்தனர். அவர்கள் அனைவருமே இப்போது விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள் இதிலே 28மீனவர்கள் தூத்துக்குடியிலே பிடிபட்டவர்கள்.

விடுதலை செய்யப்பட்ட மீனவர்களை நாட்டிற்கு திருப்பி அனுப்புவதற்கான ஏற்பாடுகளை மீன் பிடித்துறை அமைச்சுடன் இணைந்து மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார்.

அவர்களை அடுத்த வாரமளவில் நாட்டிற்கு திருப்பி அனுப்ப முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

சென்னை தூத்துக்குடியிலே இருந்து விடுதலை செய்யப்பட்ட மீனவர்களை பெரும்பாலும் வருகின்ற கிழமையிலே இலங்கைக்கு அவர்களது படகுகளோடு அனுப்பி வைக்க முடியும் என அவர் தெரிவித்தார். (அ)

## இம்மாதத்தில் இது வரை 133 பேர் அகதிகளாகச் சென்றுள்ளனர்

(சென்னை)

இலங்கையில் இருந்து 18 அகதிகள் தனுஷ்கோடியில் உள்ள அரிச்சல் முனைக்கு வந்து சேர்ந்துள்ளனர் எனவும் இதன்படி இம் மாத்தில் இராமேஸ்வரம் வந்தடைந்த அகதிகளின் எண்ணிக்கை 133 எனவும் நிவாரண முகவரைமைப்புகள் தெரிவித்துள்ளன.

மன்னாரில் இருந்து சென்ற இந்த அகதிகள் சிறிய மீன்பிடிப் படகிலேயே சென்றுள்ளனர். இவர்கள் ஒரு குழுவாக புதன்கிழமை இரவு அரிச்சல் முனையை அடைந்தனர்.

இந்தக் குழுவில் குறைந்தபட்சம் ஏழு சிறுவர்கள் உள்ளனர். அதில் ஒரு வயதைக் கொண்ட குழந்தையும் அடங்கும். இக் குழந்தை அதன் விதவைத் தாயாரினால் பெரிய பொலித்தீன் பையினால் சுற்றப்பட்டு கொண்டு வரப்பட்டுள்ளதாக அந்த அமைப்புகள் குறிப்பிட்டுள்ளன.

சிறுவர்களில் சிலர் குறைந்த பட்சம் 24 மணி நேரமாக உணவு இல்லாதிருந்துள்ளனர். தனுஷ்கோடியின் திறந்த கடற்கரைப்பகுதியிலேயே அவர்கள் அனைவரும் இரவுப் பொழுதைக் கழித்துள்ளனர்.

இந்தப் படகுப் பயணத்திற்காக வயது வந்த ஒவ்வொருவரும் 13ஆயிரம் ரூபாவை சட்ட விரோத படகுக்காரருக்கு கட்டணமாக வழங்கியுள்ளனர். சிறுவர்களுக்கு அரைக்கட்டணம் வசூலிக் கப்பட்டுள்ளது கைக்குழந்தைக்கு மட்டும் கட்டணம் அறவிடப்பட வில்லையென்று கூறப்பட்டது. (அ-5)

## இலங்கை வங்கி முகாமைத்துவ பயிலுநர்களுக்கான எழுத்து மூலப் போட்டிப் பரீட்சை

இலங்கை வங்கி முகாமைத்துவ பயிலுநர்களுக்கான எழுத்து மூல போட்டிப்பரீட்சை எதிர்வரும் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி தொடக்கம் பிற்பகல் 2.15 மணி வரை வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதற்கான் தகுதி வாய்ந்த பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் , இலங்கை வங்கி, வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் பி.எ. அருமைநாயகத்தால் கொழும்பில் இருந்துஎடுத்துவரப்பட்டுள்ளன.

பரீட்சார்த்திகள் எதிர்வரும் 1ஆம் திகதி புதன் கிழமை வரை அனுமதி அட்டைகளை யாழ். ஆஸ்பத்திரிவீதியில் அமைந்துள்ள இலங்கை வங்கி வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளரின் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகளின் பெயர் விபரம் வருமாறு, எம். ஏபிரகாம் – நவாலி வடக்கு, எஸ்.ஆள் வாப்பிள்ளை- புலோலி, ஆர். ஆமல்லை –வி. எச். ஒழுங்கை கோப்பாய் தெற்கு, ஆர் அமல்ராஜ்- புலோலி தெற்கு, பி.எஸ்.அமிர்தநாதன் –கே.கே.எஸ்.வீதி யாழ்ப்பாணம், ரி.அனோ ஜா- புலோலி தெற்கு, எஸ். அரு ளானந்தம் –உடுவில் , எஸ். அருணன் –உடுப்பிட்டி, ஏ. ஈ.ஈ. கரோ லின்- ஊர்காவற்றுறை, ரீ. இந் துஜா –கோப் பாய் தெற்கு, வை.கணே சமூர்த்தி- தாவடி தெற்கு, பீ.கணேசராஜா- சண் டிலிப் பாய், ஜீ.ஞானப் பிரகாசம் –உடுப்பிட்டி, பீ.கௌரி பாலன்- வட்டு மேற்கு, சீ.ஓ.குணராஜ்- நவாலி தெற்கு, எஸ்.ஹம்சாயினி –மீசாலை வடக்கு, ஜே.ஐயாத்துரை – துன்னாலை, கே.ஜனனி–ஆனைக்கோட்டை, கே.ஜீவரட் ணம்- எழுது மட்டுவாழ், ஆர் .ஜெய்கர் சீதாபதி- நெல்லியடி வடக்கு, எப்.ஜெனிரஸ்–பாசை யூர், கே. ஏ.ஜெயகரன்- அலுவலர் விடுதி சென் ஜோன் கல்லூரி, ரீ.ஜெயமோகன் தொண்டைமா னாறு, என்.ஜெயமோகன்– உரும்பிராய் தெற்கு , ஏ. ஜெயந்தன்- டேவிட் வீதியாழ்ப்பாணம், வி.ஜெயந்தி –புலோலிமேற்கு, ஆர். ஜெயசுதாஜினி –அச்சு வேலி தெற்கு, ரீ.யுகதீஸ்வரா- மூத்த விநா யகர் வீதி நல்லூர், ரி.கபிலன் –பெரியமாவடி சாவ கச்சேரி, ஜே.கஜீரன்- இந்துமகளிர் ஒழுங்கை கந்தர் மடம், கே. கஜீரன்–இந்துமகளிர் ஒழுங்கை கந்தர்மடம், ஏ. கலைச்செல்வி –நவாலி கிழக்கு, எஸ். கலைவிநோதன்- சரசாலை வடக்கு, எஸ்.கனகலிங்கம் –ஸ்ரான் லிக்கல்லூரி ஒழுங்கை யாழ்ப்பாணம், கே. கனகசபாபதி- கெற்பலி மிருசுவில், எஸ்.கணநாதன் –அரி யாலை, கே.கணேசலிங்கம் ஆனைக்கோட்டை, கே.கந்தராஜா- அராலி தெற்கு, பி.கதிர் காமத் தம்பி – அத்தியடி, ஏ.கதிர்காம தாசன்- செ.ஆன்ஸ் முன் ஒழுங்கை யாழ்ப்பா ணம், என் .காயத்திரி – மிருசுவில், எஸ்.கேதீஸ் வரன்- நாகர் கோவில் தெற்கு, பி.கோகுலன் – அல்வாய் கிழக்கு, எஸ்.கோதை –பொலிகண்டி, ஏ.குகரூபன் –தச்சன் தோப்பு கைதடி, ரீ.குண பால சுந்தரம்- தொண்டைமானாறு, ஏ.எஸ். லிண்டா புதுமை மாதா கோவில் மேற்கு யாழ்ப்பாணம், ஆர்.லோகப்பிரகா சம்- ஆழங் குழாய் சண்டிலிப்பாய், ரி.மனோகரன்- பரு.வீதி நல்லூர், ரி.மேரி லெற்றீசியா- சண்டிலிப்பாய், ரி. மதன் மோகன் –கொக்குவில் கிழக்கு , டபிள்யு.மதனன்- அரியாலை, எஸ்.மத னன்– மீசாலை வடக்கு, ஆர். மோகனதாஸ்–அரசடி வீதி கந்தர்மடம், எஸ் .முரளிகரன்- பருத்தித்துறை, கே.முரளிதாஸ்- ஆவரங்கால் மேற்கு, எஸ்.முருகேசு–வரணி இயற்றாலை, ஏஜ.முத்துக்குமாரு- குப்பிளான் தெற்கு ஏழாலை, கே. முத்துலிங்கம் –சங்கிலியன் வீதி நல் லூர், தி.நடராஜா–இடைக்குறிச்சி கிழக்கு வரணி , கே.நாகையா– சுப்பிரமணியம் வீதி அரியாலை, ஏ.நாகராஜா- தொல்புரம் கிழக்கு சுழிபுரம், எஸ்.நஜிமுதீன்- மாரட்டீன் வீதி , எஸ் நளினி– தாழையடி ஒழுங்கை திருநெல்வேலி, என். நவக் கிருஷ்ண ராஜா –கோவளம் காரை நகர், வி.நிரஞ் ஜனி- அல்வாய்மேற்கு, றி.ரி.நிரோ ஜன்- உயரப் புலம் ஆணைக் கோட்டை. (11ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவான உண்ணாவிரதப் போராட்டத்தில் அ.தி.மு.க,ம.தி.மு.க பங்கேற்பு

(சென்னை)

இலங்கை தமிழர்கள் பிரச்சினைக்காக ஒக்டோபர் 2 ஆம் திகதி இந்திய கம்யூனிஸ்ட் நடத்தும் உண்ணாவிரதப் போராட்டத்தில் அ.தி.மு.க- ம.தி.மு.க பங்கேற்கிறது. இது குறித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு இலங்கைத் தமிழர்கள் பிரச்சினைக்காக காந்தி பிறந்த நாளான ஒக்டோபர் 2 ஆம் திகதி உண்ணா விரதப் போராட்டம் தமிழகத்தின் அனைத்து மாவட்டத்தலை நகரங்களிலும் நடைபெறும்.

இந்த போராட்டத்திற்கு மார்க்சிஸ்ட் ஆதரவு தெரிவித்துள்ளது. மற்ற அரசியல் கட்சியின ருக்கும் இந்திய கம்யூனிஸ்ட் அழைப்பு விடுத்திருந்தது அழைப்பை ஏற்று அ.தி. மு.க வில் இருந்து பொதுச் செயலர் ஜெய லலிதா கட்சி செயலர் தா பாண்டியனுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அந்த கடிதத்தில் கூறப்பட்டிருப்பதாவது சென்னை சேப்பாக்கத்தில் நடைபெற உள்ள உண்ணாவிரதப் போராட்டத்திற்கு நான் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்க அழைத்தமைக்கு நன்றி. தவிர்க்க முடியாத காரணத்தால் நான் கலந்து கொள்ள் முடியாத சூழலில் உள்ளேன். அ.தி.மு.க அமைப்பு செயலர் முத்துசாமி கலந்து கொள்வார். மாவட்ட தலைநகரங்களில் நடைபெறும் போராட்டத்தில் அந்தந்த மாவட்ட செயலர்கள் கலந்து கொள்வார்கள் இவ்வாறு ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

ம.தி.மு.க பொதுச் செயலர் வைகோ சென்னையில் நடத்தும் போராட்டத்தில் வாழ்த்திப் பேச ஆதரவு தெரிவித்துள்ளார். இவ்வாறு செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. (அ-5)

குற்றமற்றவரை –ஒன்றும் அறியாதவரை – நிராகரித்துக் கண்டிப்பது எவ்வளவு வெட்கக் கேடான காரியம். – சாக்கிரட்டீஸ்

வலம்புரி

# எல்லாமே பொய் வேடம் துன்பப்படுவோருக்கு இறைவனே துணை!

ஐ.நா. சபையின் செயலாளர் பான் கீ மூனை இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இதற்கு முன்னதாக பிரித்தானியப் பிரதமருடனும் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இச்சந்திப்புகளில் ஈழத்தமிழர்களின் குறிப்பாக வன்னி நிலைவரம் குறித்து எதுவுமே பேசவில்லை என்று தெரிகிறது.

வடக்கு யுத்த நிலை தமக்கு கவலையளிப்பதாக கூறியிருந்த ஐ.நா. சபையின் செயலாளர் இலங்கை ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது உணவுப் பிரச்சினை தொடர்பில் இலங்கை அரசு முன்னெடுத்துவரும் நடவடிக்கைகள் ஏனைய நாடுகளுக்கும் முன்மாதிரியாக இருப்பதாக புகழாரம் சூட்டினாராம்.

வன்னியில் இடம்பெறும் யுத்தம் காரணமாக மக்கள் உணவுக்கு வழியின்றி ஆற்றலையும் போது உணவுப் பிரச்சினைக்கு இலங்கை அரசு முன்னெடுக்கும் நடவடிக்கைகள் முன்மாதிரியானவை எனக் கூறுவதில் ஏதேனும் பொருத்தப்பாடு உண்டா?

ஆக எல்லாமே பொய்வேடங்கள் என்பதைத் தமிழ் மக்கள் உணர்ந்து கொண்டுள்ளனர்.

இலங்கை நிலைவரம் தமக்கு கவலையளிப்பதாக கூறியிருந்த ஐ.நா.செயலாளர், மகிந்த ராஜபக்ஷவை சந்தித்தபோது வன்னியில் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புகள் இயங்குவதற்கு அனுமதி அளிக்கவேண்டுமெனக் கேட்டிருக்கவேண்டும்.

இல்லையேல் இலங்கை அரசு மீது கடுமையான அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டியிருக்கவேண்டுமென அதட்டியிருக்கவேண்டும்.

இதை விடுத்து உணவுப் பிரச்சினைக்கான நடவடிக்கையைப் பாராட்டுவது எவ்வகையில் பொருத்துடையது?

போர் நடக்கும் நாட்டில் சிறுபான்மையின மக்கள் வாழும் பகுதிகளில் படைகளில் விமானம் குண்டுவீசும்போது, மக்கள் இடம்பெயர்ந்து தங்கியிருக்க இடமின்றி தவிக்கும்போது, எங்களை விட்டுப்போகாதீர்கள் என்று கெஞ்சிய போது எதனையுமே பொருட்படுத்தாமல் ஐ.நா. சபையின் அமைப்புகள் வன்னியில் இருந்து வெளியேறின.

இந்த அமைப்புக்களின் வெளியேற்றத்தால் வன்னி மக்கள் உதவியின்றி –நிவாரணப் பணிகள் கிடைக்காத நிலையில் பெரும் துன்பப்படுகின்றனர்.


இந்த துன்பநிலை கண்டும் வெளியேறிய அமைப்புகள் அரசு வெளியேறுமாறு பணித்தது; அதனால் வெளியேறினோம் என்று சாதாரணமாகக் கூறியுள்ளன. அப்படியானால் இந்த அமைப்புக்களால் மனித நேயப் பணிகளை எவ்வாறு முன்னெடுக்க முடியும்?

ஒரு நாட்டின் அரசியல் எல்லைக்குள் யுத்தம் நடந்தால் –ஒரு பகுதி மக்கள் மீது அரசு தாக்குதல் நடத்தினால் அவ்விடயத்தில் அரசு அனுமதித்தால் மட்டுமே பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ முடியும் எனக் கூறுவது எவ்வகையிலும் நியாயமும், பொருத்தப்பாடும் உடையதல்ல.

எனவே ஐ.நா போன்ற அமைப்புக்களும் துன்பப்படுவோருக்கு உதவுபவை என்ற கருத்தியலை மாற்றி எழுதும் காலம் நெருங்கும் இக்காலகட்டத்தில், இறைவனே துன்பப்படுவோருக்குத் துணை என்பதைத் தவிர தமிழ் மக்களுக்கு வேறு நம்பிக்கை ஏதும் இல்லை.

# வல்லிபுர மாயவனை வணங்கி நலம் பெறுவோம்

வல்லிபுர ஆழ்வார் ஆலயம் துன்னாலையூரில் வல்லிபுர குறிச்சியில் பருத்தித்துறை அம்பன் வீதியின் கிழக்குப் புறமாக



அமைந்துள்ளது. வீதியின் மேற்குப் புறமாக குருக்கட்டுப் பிள்ளை யார் ஆலயம் உள்ளது. வல்லிபுர ஆழ்வார் ஆலயம் செல் லும் அடியார்கள் பிள்ளை யார் ஆலயத்தின் மேற் குப் புறம் உள்ள புனித மான தெளித்த தீர்த்தம் நிறைந்த கேணியில் நீராடி தியானம் செய்த பின்பிள்ளையாரை வணங் கியபின் வல்லிபுர ஆழ்வார் ஆலயம் செல்வது வழமையாகும். வல்லிபுர ஆலயத்தின் பெரு விழா புரட்டாதி மாதம் அமாவாசை தினத்தில் கொடியேறி பதினேழு தினங்கள் நடைபெறும்.

இன்று கொடியேற்ற விழா ஆரம்பமாகிறது. வெண்ணெய்த் திருவிழா, சப்பறத் திருவிழா, தேர்த்திருவிழா, தீர்த்தத் திரு விழா என்பவற்றில் குடா நாடு எங்கும் உள்ள அடியார்கள் வணக்கத்திற் காகக் கூடுவர்.

தீர்த்தத்திருவிழா இருதினங்கள் நடைபெறுவது ஒரு விசேட நிகழ்வாகும். சமுத்திர தீர்த்தம் வங்கக் கடற்கரையில் நடை பெறும். ஆலயத்தில் இருந்து இரண்டு மைல் தூரமுடைய வங்கக் கடற்கரையில் நடைபெறும் தீர்த்தமாகும். சுவாமியும் குருக்களும் மேளக்கோஸ்டியும் வேறுபல நீச்சல் வீரர்களும் வள்ளத்தில் செல்வர். கரையிலிருந்து ஐம்பது பாக தூரத்தில் வள்ளத்தில் தீர்த்த நிகழ்வுகள் நடைபெறும்.

கடற்கரையில் ஏராளமான அடியார்கள் கூடி நின்று தீர்த்தமாடுவர் பூரணை நிலவு ஆரம்பிக்கும் போதுகடற்கரையைப் பார்க்கும் போது சிலப்பதிகாரத்தில் வரும் இந்திர விழா ஞாபகத்துக்கு வரும். சப்பறத்திருவிழாவில் நூற்றுக்கணக்கான அடியார்கள் கற்பூரச்சட்டி நேர்த்தி செய்வர்.

**கவிமணி கந்தமுருகேசதாசனார்**

சப்பறத்திரு விழாவை கற்பூரத்திருவிழா எனவும் வழங்கப்படும். கேணித் தீர்த்தம் கோவிலின் மேற்குப்புறமாக வீதியின் ஓரமாக உள்ள கேணியில் நடைபெறும் கேணித்தீர்த்தம் முடிவுற கொடியும் இறக்கப்படும். அடியார்களாகிய நாம் வல்லிபுர மாயவனை வணங்கி நலம் பெறுவோம்.

# சக்விதி ரணசிங்க நிறுவன நிதி மோசடியில் மத்திய வங்கி அதிகாரிகளுக்கும் தொடர்பு

## அமைச்சர் மேர்வின் சில்வாவும் விசாரணையில்

(கொழும்பு)

சக்விதி ரணசிங்க என்ற பெயரில் இயங்கி பல கோடி ரூபாய்களை மோசடி செய்ததாகக் கூறப்படும் சக்விதி ரணசிங்க என்ற நிதி நிறுவனம் தொடர்பாக இலங்கை மத்திய வங்கி பாராமுகமாக இருந்தமை தொடர்பில் பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து மத்திய வங்கியின் அதிகாரிகள் சிலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள். இவர்கள் ரணசிங்க என்பவரிடம் இருந்து ஏதாவது நன்மைகளைப் பெற்றிருப்பார்கள் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

ரணசிங்க வாடிக்கையாளர்களிடம் இருந்து வைப்புக்களைப் பெற்றபோது எடுக்கப்பட்ட வீடியோப் படங்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். ஏற்கனவே ரணசிங்க தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸார் இரகசிய அறிக்கை ஒன்றை மத்திய வங்கியிடம் கையளித்திருந்தபோதும் மத்திய வங்கி அதிகாரிகள் ஏன் அதனை கருத்திற்கொள்ளவில்லை என்ற சந்தேகம் விசாரணைகள் மத்தியில் எழுந்துள்ளது.

இதுவரை கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி ஒரு உதவிப் பொலிஸ் அதிபர், 10 சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் பல அரசாங்கப் பணியாளர்கள் சக்விதி ரணசிங்கவின் நிதி நிறுவனத்தில் முதலீடுகளைச் செய்திருப்பது தெரியவந்துள்ளது.

இந்நிலையில் இவர்களுக்கு இந்தளவு தொகையான பணம் எங்கிருந்து வந்தது. அது கறுப்புப் பணமா என்பது குறித்து விசாரணைகளை நடத்தப் போவதாக இலஞ்ச ஊழல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த உதவிப் பொலிஸ் அதிபர் ,ரணசிங்க நிறுவனத்தில் 7மில்லியன் ரூபாய்களையும் 10சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர்கள் 3.5 மில்லியன் ரூபாய்களில் இருந்து6 மில்லியன் ரூபாய்களையும் முதலீடு செய்துள்ளதாக தெரியவந்துள்ளது.

அத்துடன் ரணசிங்க நிதி நிறுவத்தில் அமைச்சர் மேர்வின் சில்வா தனது மனைவியின் பெயரில் 6.5 மில்லியன் ரூபாய் பெறுமதியான வாகனம் ஒன்றை அடகு வைத்துள்ள தகவலும் வெளியாகியுள்ளது.

இந்த நிலையில் அமைச்சர் மேர்வின் சில்வா,சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி சேரசிங்க,மற்றும் பொலிஸ் அதிகாரி சந்த சில்வா ஆகியோரிடமும் இரகசிய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ–6)

# ஐ.நாவில் ஜனாதிபதி தமிழில் உரையாற்றியமை சர்வதேசத்தை ஏமாற்ற கையாண்ட வித்தை–சிறில் எம்.பி

(கொழும்பு)

ஐ.நாவில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழில் உரையாற்றியமை அவர் சர்வதேசத்தை ஏமாற்ற கையாண்ட வித்தையென தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சொலமன் சிறில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கடற்றொழில் நீரியல் வளங்கள் தொடர்பான சட்டமூல விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது,

ஐ.நாவில் ஜனாதிபதி தமிழில் உரையாற்றிவிட்டதாக பேரினவாதிகள் பாராட்டுகின்றனர்; வாழ்த்துகின்றனர். தமிழர்களுக்கு ஏதோ தீர்வு பெற்றுக் கொடுத்துவிட்டது போல் பிரசாரப்படுத்துகின்றனர்.

இலங்கையில் தமிழ் மக்களை கொன்றொழித்துக் கொண்டு, அவர்கள் மீது பாரிய யுத்தத்தை திணித்துக் கொண்டு, தமிழ் மக்களின் உரிமைகளை வழங்காது மறுத்துக்கொண்டு ஆட்சி புரிபவர் தான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

இவர் தமிழ் மக்கள் மீது கொண்ட பற்றிலோ அல்லது தமிழ் மொழி மீதுள்ள பற்றிலோ தமிழில் பேசவில்லை. இலங்கையில் நடக்கும் தமிழின அழிப்பை மூடிமறைக்கவும் சர்வதேச நாடுகளை ஏமாற்றவுமே மகிந்த ராஜபக்ஷ இந்த வித்தையைப் புரிந்துள்ளார்.

இந்தநாட்டில் கடற்றொழில் செய்யும் தமிழர்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் பகுதிகளில் அவர்கள் மீன் பிடிக்க நேரக் கட்டுப்பாடுகள் ,பாஸ் நடைமுறைகளும் விதிக்கப்பட்டுள்ளன. 3 மணித்தியாலங்களுக்குள் மீன்பிடித்துக் கொண்டு திரும்ப வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த குறிப்பிட்ட நேரத்தினுள் எவ்வாறு மீன் பிடிப்பது?

பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு எந்த வித மானியமோ, நஷ்டஈடோ, நிவாரணமோ வழங்கப்படவில்லை. இதுகுறித்து அரசு எந்தவித கவனமும் எடுக்கவில்லை. தமிழ் மீனவர்கள் என்ற காரணத்தினால் திட்டமிட்டு வஞ்சிக்கின்றது.

வன்னியிலுள்ள மீனவர்கள் எரிபொருள் தட்டுப்பாட்டினாலும் படையினரின் கட்டுப்பாட்டினாலும் மீன்பிடித்தொழிலைச் செய்ய முடியாதுள்ளது. அவர்களின் வீடுகளில் அடுப்புகள் புகைவதற்குப் பதிலாக அந்த மீனவர்களின் வயிறுகளே புகைகின்றன. எம்மை அடக்கியாள முற்படாதீர்கள். எமக்குரிய உரிமைகளை வழங்குங்கள் அல்லாது விட்டால் எங்களைத் தனியாகவாவது வாழவிடுங்கள். (அ–6)

# சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

## ஆளுமையின் பல்வேறு நிலைகள்



ஒவ்வொரு மனித ஆளுமையையும் ஒரு கண்ணாடிக் கோளத்திற்கு ஒப்பிடலாம் .ஒவ்வொன்றின் நடுவிலும் இறைவனிடம் இருந்து வெளிப்படும் தூய வெள் ஒலி இருக்கிறது.ஆனால் கண்ணாடிகள் பல நிறங்களிலும் பல கனங்களிலும் இருப்பதால் வெளிவரும் கதிர்கள் பல்வேறு தோற்றங்களைப் பெறுகின்றன. எல்லா நடு ஒலிகளும் ஒரே மாதிரியானவை ஒரே அழகைக் கொண்டவை. வித்தியாசமாக தோன்றுவதற்கு காரணம் அது.வெளிப்படுகின்ற புறக்கருவிகளில் உள்ள குறைபாடுகளே. நாம் மேலே உயர உயர அந்தக் கருவி மேலும் தெளிவாக ஒலி வீசும் தன்மையை அடைகிறது.

# முன்னரங்க போர் முனையில் கமூடிகளின் அறிமுகம்

வன்னிப் போர் அரங்கில் கடந்த 15ஆம் திகதி புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை நோக்கி முன்னேறும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த 57ஆவது டிவிசன் படையினர் திடீர் என கண் எரிச்சல், உடல் அரிப்பு, மூச்சுத்திணறல், வாந்தி, குமட்டல் போன்ற உபாதைகளை திடீர் என எதிர்கொண்டனர்.

சில படையினர் மயங்கி வீழ்ந்தனர். ஒருபுறத்தில் கடும் சண்டை நடந்துகொண்டிருந்தது. புலிகளின் ஆட்டிலறி மற்றும் மோட்டார் செல்கள் வீழ்ந்து வெடித்துக்கொண்டிருக்க அவசர அவசரமாக பாதிக்கப்பட்ட படையினர் வாகனம் மூலமும் ஹெலிகொப்டர் மூலமும் கொண்டு செல்லப்பட்டு அனுராதபுர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

அக்கராயன் கள முனையில் இருந்து ஆறு படையினரும் மறு நாள் காலை வன்னி விளாங்குளம் களமுனையில் இருந்து 12 படையினரும் இவ்வாறு திடீர் சுகவீனமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் பலருக்கு மூச்சுத்திணறல் காணப்பட்டது.

அன்று இரவு நடந்த மோதலையடுத்து


வன்னிப்போர் முனையிற் படையினர். (படம்: ராய்ட்டர்)

22 பேர் கொண்ட இராணுவ அணியுடனான தொடர்புகள் அற்றுப் போயின. இவர்கள் புலிகளின் தாக்குதலில் சிக்கியிருக்கலாம் என்றே நம்பப்பட்டபோதும் மறு நாள் காலை அவர்கள் தமது படைப்பிரிவுடன் இணைந்து கொண்டனர். அவர்களும் அதே வகையான பாதிப்புக்கு உள்ளாகியிருந்தனர்.

எவருக்கும் உயிர் ஆபத்து ஏற்படாவிட்டாலும் இந்தச் செய்தி இராணுவ வட்டாரங்களில் பெரும் பரபரப்புடன் பேசப்பட்டது. புலிகள் ஏதோ ஒரு விஷ வாயுவை படையினர் மீது பிரயோகித்திருக்கின்றனர். அதனால் தான் படையினர் பாதிக்கப்பட நேரிட்டது என்று பரவலான கதை அடிபடத்தொடங்கியது.

இந்த தகவல் இராணுவ வட்டாரங்களில் இருந்து மெல்ல மெல்ல ஊடக வட்டாரங்களில் பரவத்தொடங்கியது.

விஷயம் கொழும்பை எட்டியதுமே சுகாதாரத்துறை அமைச்சர் உடனடியாக இராணுவ மருந்துவ படைப்பிரிவு அதிகாரிகளையும் சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகளையும் அழைத்து ஒரு விசேட கூட்டத்தை நடத்தினார்.

பேராசிரியர் ரவிந்திர பெர்னாண்டோ, சுகாதார அமைச்சின் பதில் செயலாளர் நிகால் ஜெயதிலக்க போன்றோருடன் இராணுவ மருத்துவப்படைப் பிரிவைச் சேர்ந்த பிரிக்கேடியர் சஞ்சீவ சேனாரத்ன, கேணல் ஆரியரத்ன, மேஜர் ருவான் சேனாதிலக போன்றோரும் வேறு சில

> எந்தவொரு வாயுத்தாக் குதலையும் எதிர்கொள்ளத்தக்க தயார் நிலையில் இராணுவம் இருப்பதாக இராணுவத்தளபதி கூறுகிறார்.

மருத்துவ நிபுணர்களும் இந்த அவசரகூட்டத்தில் பங்கேற்றனர்.

இந்த கூட்டத்தில் வடக்கில் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்ற படையினர் மீது புலிகள் இரசாயன ஆயுதங்களைக் கொண்டு தாக்குதல் நடத்தலாம் என்பதால் அதற்கான தயார் நிலையில் சுகாதாரப் பிரிவை உசார் நிலையில் வைத்துக் கொள்வது என்று முடிவு செய்யப்பட்டது.

அத்துடன் வவுனியா, மன்னார், பதவியா, மணலாறு வைத்தியசாலைகளில் விசேட மருத்துவ குழுவினரை நியமிக்கவும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா உத்தரவிட்டார். தென்பகுதியில் இருந்து மருத்துவர்கள் மற்றும் தாதிமாரை அங்கு மேலதிகமாக அனுப்பவும் முடிவு செய்யப்பட்டது. அதேவேளை இரசாயன பகுப்பாய்வுப் பிரிவுக்கு தகவல் கொடுக்கப்பட்டுபுலிகள் பிரயோகித்த வாயுவை இனம் காணும் முயற்சிகள் துரிதப் படுத்தப்பட்டன. புலிகள் இராசாய வாயுவை படையினர் மீது பிரயோகித்தார்கள் என்ற தகவலோ அதனால் பாதிக்கப்பட்ட படையினர் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர் என்ற தகவலோ ஊடகங்களில் வெளிவருவதற்கு முன்னர் அந்த வாயுவை இனங்கண்டு விட வேண்டும் என்பதில் அரசாங்கமும் பாது காப்பு தரப்பும் உறுதியாக இருந்தன.

வாயுவை இனம் காண்பதற்கு முன்னதாக இந்த தகவல் வெளி வந்துவிட்டால் அது போரிடும் படையினரின் மனோ நிலையை பாதித்துவிடும் என்பதுடன் தென்பகுதி மக்களிடத்திலும் அச்சம் உருவாகிவிடும். இதனால்தான் அரசங்கம் அவசரப்பட்டது.

ஆனாலும் ஆங்கில நாள் இதழ் ஒன்று மூன்றாவது நாள் செய்தியை வெளியில் கசிய விட உடனடியாகவே இராணுவ தலைமையகத்தின் அறிக்கையும் அன்றைய தினமே வெளியானது.

அந்த அறிக்கையில் புலிகள் நடத்தியது சாதாரணமான கண்ணீர் புகை குண்டு தான் என்று குறிப் பிடப்பட்டிருந்ததுடன் அது குறித்து அதிகம் அலட்டவேண்டியதில்லை என்பது போன்றும் தகவல்கள் உள்ள டக்கப்பட்டிருந்தன.

சீ.எஸ்.எனப்படும் இந்த வாயுவை சாதாரணமாக கல கம் அடக்கும் நட வடிக்கை யிலும் பணயக்கை திகள் மீட்பு, கடத்தல் முறியடிப்பு நடவடிக்கை ளின் போதும் படை யினர், பொலிஸாரால் பயன்படுத்துவது உண்டு.


தென்கொரியாவில்...

சி.எஸ்.எனப்படும் கண்ணீர் புகை குண்டுத் தாக்குதலை இதற்கு முன்னர் புலிகளும், பயன்படுத்தியிருப்பினும் கூட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் விஷ வாயுத் தாக்குதலாக இருக்குமோ இராசாயன வாயுவாக இருக்குமோ என்ற அச்சம் படைத்தரப்பில் ஏற்பட்டிருந்தது.

1990இல் இரண்டாம் கட்ட ஈழப்போர் வெடித்த சில நாட்களில் புலிகள் மட்டக் களப்பில் இருந்த இராணுவ முகாம்களை தம் வசப்படுத்தும் தாக்குதல்களை மேற் கொண்டிருந்தனர்.

கிரானில் இருந்த இராணுவ முகாம் வீழ்ச்சியடையாமல் சண்டை நீடித்துக் கொண்டிருந்தது. அப்போது தான் புலிகள் முதல் முறையாக சி.எஸ்.வாயுத் தாக்கு தலை நடத்தினர். அப்போது அது ஏதோ இராசாயன ஆயுதமாக இருக்கலாம் என்று படைத்தரப்பு சந்தோகித்தது. பின்னர் தான் உண்மை நிலவரம் தெரியவந்தது. அதுபோன்றே 1995இல் ரிவிரெச நட வடிக்கை உக்கிரமான மோதலாக வெடித் திருந்தபோது அரியாலை -நாயன்மார்க் கட்டு - இருபாலைவரை நீண்டிருந்த இராணுவ முன்னரங்க நிலைகளை ஊட றுக்க புலிகள் ஒரு தாக்குதலை மேற்கொண்டிருந்தனர். அப்போதும் இந்த வாயுத் தாக்குதல் நடத்தப்பட்டபோது படைத்தரப்பு ஏதோ இராசயான ஆயுதத்தைபுலிகள் பிரயோகித்திருப்பதாக குழப்பமடைந்திருந்தது.

அப்போது புலிகள் பயன்படுத்தியது சி.எஸ்.வாயுதான் என்பதை உறுதி செய்த பின்னரே படைத்தரப்பு நிம்மதி அடைந் திருக்கிறது. புலிகள் கடைசிக் கட்டத்தில் இராசாயன ஆயுதத்தாக்குதலை நடத்தலாம் என்று கூறப்பட்ட கருத்துகளை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேக முன்னர் நிராகரித்திருந்தார்.

இப்போது எந்தவொரு வாயுத்தாக்கு தலையும் எதிர்கொள்ளத்தக்க தயார் நிலையில் இராணுவம் இருப்பதாக அவரே சொல்கிறார். அது மட்டுமன்றி புலிகள் எம் மீது வாயுத்தாக்குதல் நடத்தினால் அதை விட திறன்கொண்ட வாயுத்தாக்குதலை நாம் நடத்த நேரிடும் என்றும் அவர் எச் சரித்திருந்தார்.

இப்போது முன்னரங்க நிலைகளில் உள்ள படையினருக்கு அவசர அவசரமாக வாயுக்காப்பு முகமூடிகள் வழங்கப்பட்டி ருக்கின்றன. இராணுவத்தலைமையகம் எத்தகைய வாயுத்தாக்குதலையும் எதிர் கொள்ளும் விதத்தில் இந்த நடவடிக் கையை எடுத்திருக்கிறது.

புலிகள் அதற்குப்பின்னர் வேறு எந்த களமுனையிலும் வாயுத்தாக்குதலை நடத்தவில்லை. ஆனால் படையினருக்கு இந்த வாயுக்காப்பு முகமூடிகள் பிரச்சி னையாக இருப்பதாக தெரிவிக்கப் படுகின்றது. இரகசிய நகர்வுகளின் போதும் சரி சண்டையில் ஈடுபடும் போதும் சரி முகத் தில் ஒரு சுமையுடன் முன் நகர்வது படை யினருக்கு இடையூறாக இருப்பதுடன் அவர்களை புலிகள் இலகுவாக கண்டு பிடித்துவிடக்கூடும் அபாயமும் இருப்பதாக களமுனை படை அதிகாரிகளால் இராணு வத் தலைமைக்கு தெரியப்படுத்தப் பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

சுபத்ரா
நன்றி:-வீரகேசரி வார ஏடு

## சி.எஸ்.வாயு

அமெரிக்கர்களான பென்கோர்சன், றோஜர் ஸ்ரொக்ரன் ஆகியோர் 1928 ஆம் ஆண்டில் சி.எஸ். வாயுவைக் கண்டு




பிடித்தனர். இவர்க ளின் பெயர்களின் முத லெழுத்துக்க ளாலேயே இந்த வாயு சி.எஸ்.என அழைக்கப்படுகிறது.

இங்கிலாந்தில் மேற்கொள்ளப்பட்ட இரகசிய ஆய்வுக ளின் பின்னர் இது மேலும் அபிவிருத்தி செய் யப்பட்டது. உலகளவில் 15 இற்கும் அதிகமான வெவ்வேறு வகைகளில் இந்த வாயுக்கள் தயாரிக்கப்படுகின்றன.

கண், தோல், மூக்கு போன்றவற்றில் உபா தைகளை ஏற்படுத்தும் வகையில் ஒவ்வொன் றும் ஒருவிதமாக இவை தயாரிக்கப்ட்டு பயன் பாட்டில் உள்ளன. சாதாரணமாக பிஸ்டல் ரவை மூலம் செலுத்துவது தொடக்கம் கிரனேட் லோஞ் சர் போன்று செலுத்தும் ரகம், விசிறும்ரகம், கிரனேட் போன்று வீசும் ரகம் என்று ஏகப்பட்ட வடி வங்களில் இவை பயன்பாட்டில் இருக் கின்றன.

பிரிட்டிஷ் இராணுவம் முதல் முறையாக 1958 இல் சைப்பிரஸில் தான் இந்த வாயு வைப் பரீட்சித்துப் பார்த்தது. ஆனால் இதை பெரியளவில் போரில் பயன்படுத்தியது அமெ ரிக்காவே.

வியட்னாம் போரின் போது காடுகள் மலைக் குகைகள் பதுங்குகுழிகளில் ஒளிந்திருந்த வியட்னாம் கெரில்லாக்களை வெளியான பிரதேத்துக்குக் கொண்டுவர அமெரிக்கப் படைகள் தொன் கணக்கான சி.எஸ்.வாயுக் குண்டுகளை விமானத்தில் இருந்து வீசின. 7500 தொன் சி.எஸ்.வாயு வியட்னாம் போரின் போது அமெரிக்காவல் பயன்படுத்தப்பட்டது.

அது மட்டுமின்றி உலகில் பல்வேறு நாடு களிலும் கிளர்ச்சி தடுப்பு மற்றும் போர் நட வடிக்கைகளில் இந்தவாயு பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

இது ஒரு ஆயுதமாக அல்லது இரசாயன ஆயுதமாக ஏற்றுக்கொள்ளப்படாத நிலை யில் தான் இலங்கை அரசு புலிகள் மீது குற் றச்சாட்டுக்களை முன்வைப்பதற்குப் பதிலாக படையினரின் பாதுகாப்பின் மீது கவனம் செலுத்த ஆரம்பித்திருகிறது. (அ-5)

# டில்லியில் குண்டு வெடிப்பு; ஆஸி.அணி அதிர்ச்சியில்

(ஜெய்ப்பூர்)

டில்லி குண்டு வெடிப்பால் அவுஸ்திரேலிய அணி அதிர்ச்சி அடைந்துள்ளது.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இதில் இந்திய அணியுடன் 4 டெஸ்ட் போட்டி தொடரில் விளையாட உள்ளது. தற்போது அந்த அணி ஜெய்ப்பூரில் பயிற்சி ஆட்டத்தில் ஈடுபட்டுள்ளது.

பாகிஸ்தானில் அடிக்கடி குண்டு வெடிப்பு சம்பவங்கள் நடந்து வந்ததால் அங்கு நடக்கும் சம்பியன் கோப்பை போட்டியில் கலந்து கொள்ள மாட்டோம் என்று அறிவித்தனர்.

இந்நிலையில் அகமதாபாத் குண்டு வெடிப்பை அடுத்து டில்லியிலும் குண்டு வெடித்ததால் இந்தியாவுக்கு வரவும் அவுஸ்திரேலிய அணி தயக்கம் காட்டியது.

ஆனால் அவுஸ்திரேலிய பாதுகாப்புத் துறை, அவுஸ்திரேலிய அணியை இந்தியா செல்லலாம், பாதுகாப்பு பிரச்சினை வராது என்று அறிவித்தது. இதனால் அவர்கள் இந்தியா வந்துள்ளனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் மீண்டும் டில்லியில் குண்டு வெடித்துள்ளது. இது அவுஸ்திரேலிய அணியை அதிர்ச்சியடைய செய்துள்ளது. இதுபற்றி அவ்அணியின் கிரிக்கெட் அணி மேலாண்மை குழு ஆலோசனை நடத்தியது.

இதுபற்றி அணியின் செய்தித் தொடர்பாளர் மத்யூ சலேட் கூறியதாவது,

குண்டு வெடிப்பு தொடர்பாக எங்களுக்கு எந்த தகவலும் வரவில்லை. அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபையிலிருந்து எதுவும் சொல்லவில்லை. இதுபற்றிய விபரங்களை அறியகாத்திருக்கிறோம். அதுவரை எதுவும் சொல்ல முடியாது. கிரிக்கெட் சபை என்ன சொல்கிறதோ அதன்படி நடந்து கொள்வோம். தற்போது எங்கள் வீரர்களுக்கு போதுமான பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதுபற்றி ராஜஸ்தான் கிரிக்கெட்சபை நிர்வாகிகள் கூறும்போது, அவுஸ்திரேலிய வீரர்களுக்கு ஏற்கனவே பலத்த பாதுகாப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

டில்லி குண்டுவெடிப்பை அடுத்து இன்னும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு அதிகாரிகள் அவ்வப் போது எங்களுடன் ஆலோசனை நடத்தி வருகிறார்கள் என்றார். (5)

# ஹைடனை நம்பியே ஆஸி

## –சகீர்கான் கணிப்பு



(வதோதரா)

டெஸ்ட் தொடரில் அவுஸ்திரேலிய அணி ஹைடனை தான் பெரிதும் நம்பி இருப்பதாக சகீர்கான் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலியா நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடுகிறது. முதல் டெஸ்ட் அடுத்த மாதம் 9ஆம் திகதி பெங்களூருவில் ஆரம்பமாகிறது.


இத்தொடர் குறித்து இந்திய வேகப் பந்து வீச்சாளர் சகீர்கான் அளித்த பேட்டியில், அவுஸ்திரேலிய அணி ஹைடனை தான் நம்பி களமிறங்குகிறது.

சுழற்பந்து வீச்சை சமாளித்து ஆடக்கூடியவர் அவர்தான். பொன்டிங் மீது நெருக்கடி அதிகரித்து உள்ளதை சாதகமாக பயன்படுத்திக் கொள்வோம்.

இவர் இந்திய மண்ணில் துடுப்பாட்டத்தில் தடுமாறுவது வழக்கம். எனக்கு தரப்பட்டுள்ள பொறுப்புக்களை விரும்பி ஏற்றுள்ளேன். எதிரணி துடுப்பாட்டவீரர்களின் இணைப்பாட்டத்தை தகர்க்க பந்துவீச அழைக்கப்படுவது முக்கியத்துவம் வாய்ந்தது. முனாப், இஷாந்த் முழு ஆற்றலை வெளிப்படுத்துகிறார்கள் என்றார். (5)

# இந்திய தொடரிலிருந்து வோகன் நீக்கம்

இந்திய தொடருக்கான அணியிலிருந்து இங்கிலாந்து வீரர் மைக்கெல் வோகன் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார்.



இங்கிலாந்து அணி எதிர்வரும் நவம்பர் மாதம் இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இரண்டு டெஸ்ட் மற்றும் ஏழு ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடர்களில் விளையாடுகிறது.

முதல் ஒரு நாள் போட்டி நவம்பர் 14ஆம் திகதி ராஜ்கோட்டில் நடக்கிறது. இத்தொடருக்கான இங்கிலாந்து அணி அறிவிக்கப்படுகிறது.


இதற்கு முன்னதாக மைக்கெல் வோகன் அணியிலிருந்து அதிரடியாக நீக்கப்பட்டார்.

சமீபத்தில் நடந்த தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட் தொடரில் ஏற்பட்ட தோல்வி காரணமாக இவர் தனது பதவியை ராஜினாமா செய்தார்.

இதையடுத்து புதிய அணித் தலைவராக களமிறங்கிய பீற்றர்சன் தென்னாபிரிக்காவுடனான ஒரு நாள் தொடரை 4–0 என வென்று அசத்தினார். இதையடுத்து வோகன் அணியில் இடம்பிடிப்பதே சந்தேகமாக இருந்தது. இதை நேற்று முன்தினம் இங்கிலாந்து தேர்வு குழு உறுதி செய்துள்ளது.

இது குறித்து அவர் கூறுகையில், இந்திய தொடரில் வோகன் விளையாட மாட்டார். மோசமான போர்ம் காரணமாக அவர் நீக்கப்பட்டுள்ளார். இந்த ஓய்வு அவருக்கு நல்ல மாற்றத்தை தரும் என்றார். (5)

# பயிற்சிப் போட்டி சமனிலையில் முடிவு



(டில்லி)

அவுஸ்திரேலியா, ராஜஸ்தான் கிரிக்கெட் அகடமி அணிகளுக்கு இடையிலான இரண்டு நாள் பயிற்சி போட்டி வெற்றி தோல்வியின்றி சமநிலையில் முடிபடைந்தது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி தனது முதல் பயிற்சி போட்டியில் ராஜஸ்தான் கிரிக்கெட் அகடமி அணியை சந்தித்தது.

ஜெய்ப்பூர் மான்சிங் அரங்கில் நேற்று முன்தினம் ஆரம்பமான இந்த போட்டியில், நாணய சுழற்சியில் வென்ற பொண்டிங் தலைமையிலான அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி களமிறங்கிய அவுஸ்திரேலியா 77.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 218 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

சைமன் கட்டிச் மாத்திரம் அரைச்சதம் ஒன்றை பெற்றார். 105 பந்துகளுக்கு முகம் கொடுத்த அவர் 10 பவுண்டரிகளுடன் 73 ஓட்டங்களை பெற்றார்.

இது தவிர ஷேன் வோட்சன் 81பந்துகளுக்கு 30 ஓட்டங்களை பெற்றார். பந்துவீச்சில் கஜேந்திர சிங் 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

தொடர்ந்து தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த ராஜஸ்தான் கிரிக்கெட் அகடமி அணி முதல் நாள் ஆட்ட நேர முடிபின் போது 11 ஓவர்களில் 38 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

இந்நிலையில் நேற்றைய தினம் தனது முதல் இன்னிங்ஸை தொடர்ந்த ராஜஸ்தான் கிரிக்கெட் அகடமி அணி 52.2 ஓவர்களில் 122 ஓட்டங்களுக்கு சுருண்டது. அதிகபட்சமாக றொபின் பிஸ்ட் 34 ஓட்டங்களை பெற்றார்.

அவுஸ்திரேலிய அணி சார்பாக பந்துவீச்சில் புதுமுக வீரர்களான பிலின்கர் மற்றும் கிரெஜ்சா ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும் பிறெட் லீ 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். இதனிடையே ராஜஸ்தான் கிரிக்கெட் அகடமி அணி தனது முதல் இன்னிங்ஸை முடித்ததும் போட்டியை முடிபுக்கு கொண்டு வர தீர்மானிக்கப்பட்டமை விசேட அம்சமாகும். (5)

# இலங்கை வங்கி முகாமைத்துவ பயிலுநர்களுக்கான...

பி.நிஷாந்தன் –குப்பிளான் தெற்கு, ஏ.நிதர்ஷன் –சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, எம்.நித்தியானந்தன் –மாதகல் மேற்கு, வை.பரம்சோதி –சென்.பெனடிக்ஸ் வீதி, நல்லூர் கிழக்கு, ரி.பார்த்தீபன் –கரணவாய் கரவெட்டி, எஸ்.பத்மராஜா –நுணாவில் மத்தி, சாவகச்சேரி, ஆர்.பிரசாந்தன் – வட்டு.கிழக்கு, என்.பிரதீபன் –மூத்தவிநாயகர் வீதி, நல்லூர் கிழக்கு, ஏ.பொமி – 2ஆம் குறுக்குத் தெரு, பாசையூர், ரி.பிரதீபன் – திருமகள் வீதி, அரியாலை, ரி.ராஜினி –கரம்பைக் குறிச்சி வரணி, ஆர்.ராஜகோபாலன் – குமாரபுரம், லோட்டன் வீதி, மானிப்பாய், எஸ்.ராஜரட்ணம் –இமையாணன், உடுப்பிட்டி,

கே.ராஜேந்திரம் –ஊரெழு கிழக்கு, சுன்னாகம், வி.ராஜினி –சென்.செபஸ்தியர் வீதி, கோண்டாவில் கிழக்கு, பி.இராமகிருஷ்ணா – பூநாறி மரத்தடி, ஏ.ரமேஸ் – ஈவினை புன்னாலைக்கட்டுவன், எம்.ரஞ்சனா –சேர் பொன் இராமநாதன் வீதி, வி.ரதிதேவி –துன்னாலை வடக்கு, கரவெட்டி, ஆர்.ரதிதேவி –ஆவரங்கால் மேற்கு,புத்தூர், என்.ரதிக்குமார்–நல்லூர், என்.இரத்தினசிங்கம் –இணுவில் மேற்கு, எஸ்.இரத்தினம் –வண்ணார்பண்ணை, ஆர்.இரட்ணராஜா –கோண்டாவில் கிழக்கு, ஆர்.இரட்ணசிங்கம் –நாவலர் வீதி, வை.இரவீந்திரன் –கே.கே.எஸ். வீதி, எஸ்.ரிஷிகேசன் – கைதடி தெற்கு, ஜே.ரூபிகா –சென்.பீற்றர்ஸ் ஒழுங்கை, மானிப்பாய், எம்.ரூபநிதி –ஆவரங்கால், புத்தூர், ஏ.சபா –கண்டிவீதி,

தி.சலசந்திரன் –கச்சேரி வீதி, கொடிகாமம், ஆர்.சாம்பசிவம் –பலாலிவீதி, இ.சந்தனு –செபஸ்ரியன் வீதி, பாசையூர், எஸ்.சசீலா – நீர்வேலி தெற்கு, ரீ.சதீசன் –சங்கத்தானை, கே.சதீஸ்குமார் –கல்வயல், ஜே.சதீஸ்குமரன் –வண்ணார்பண்ணை, ஆர்.செல்வலிங்கம் –மலர் மகால் அல்வாய், கே.செல்வராஜா –அல்வாய் கிழக்கு, எம்.செல்வரட்ணம் –அச்செழு,ஏ.செல்வதுரை –இளவாலை வடக்கு, கே.செந்தமிழரசி –அச்சுவேலி தெற்கு, ரீ.செந்தீஸ்வரி –சேர் பொன் இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம், கே.செந்தூரன் –புத்தூர் மேற்கு, எஸ்.சண்முகநாதன் –கோண்டாவில் மேற்கு,

எஸ்.சர்மிளா – மானிப்பாய் வீதி, வண்ணார்பண்ணை, எஸ்.சிதம்பரநாதன் – பிரம்படி கொக்குவில், எஸ்.சிவஞானம் –சங்கிலியன் வீதி, நல்லூர், பி.சிவகௌரி –ஓட்டுமடம், ஏ.சிவகஜனி –மே/பா, வி.செல்வம் காந்தியடி ஒழுங்கை, என்.சிவமனோகர் –மயிலணி , சுன்னாகம், கே.சிவமதி –உசன், ரீ.சிவானந்தராசா–நாவற்குடா,வரணி, ஆர்.சிவராசா – மானிப்பாய், எஸ்.சிவராஜசிங்கம் –கோண்டாவில் மேற்கு, எஸ்.சிவசங்கர் –திருநெல்வேலி மேற்கு, எஸ்.சிவசுப்பிரமணியம்– உடுவில் கிழக்கு, எச்.சிவசுப்பிரமணியம் – புத்தூர் மேற்கு, எஸ்.சோபிதா –வல்வெட்டி, பி.சோதிலிங்கம் –கோப்பாய் வடக்கு,

வி.சிறிகாந்தன் –வட்டுக்கோட்டை, எஸ்.சுபநந்தினி –இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி, பி.சுபராணி –அம்மன் வீதி, கந்தர்மடம், எஸ்.சுபாஸ்கர் – வல்வெட்டித்துறை, கே.சுயெஸ்கா –நொத்தாரிஸ் ஒழுங்கை, அரியாலை, எஸ்.சுகந்தி –பண்டத்தரிப்பு, வி.சுகந்தி – கோண்டாவில் கிழக்கு, கே.சுகிதா–வசந்தபுரம், எஸ்.சுகிதா –தெல்லிப்பழை கிழக்கு, கே.சுகிதா –நாயன்மார் வீதி, நல்லூர், ரீ.சுமித்ரா –ஊரிக்காடு, ரீ.சுதாகரன் –கோப்பாய் தெற்கு, ஜே.சுதர்சன் –நீர்வேலி மேற்கு, எஸ்.சுதர்சினி –அரியாலை, எஸ்.தனபாலசிங்கம் –கொக்குவில் மேற்கு, எஸ்.தனரஞ்சிதராஜன் – அரசடி வீதி, யாழ்ப்பாணம்,

வி.தனுசா –புலோலி வடக்கு, எஸ்.தாரணி– உடத்திரியாவத்தை, பருத்தித்துறை, என்.தாரணி –கந்தர்மடம், ரீ.தாரணி –சுதுமலை வடக்கு, எஸ்.தர்ப்பனா–புதிய செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு, கே.தர்சிகா –சுதுமலை வடக்கு, எஸ்.தர்சினி –அளவெட்டி மத்தி, எஸ்.தர்சினி –ஏழாலை, எஸ்.தர்சினி – வடலியடைப்பு, ரி.தர்சினி –கொக்குவில் மேற்கு, ஏ.தர்சினி –தொல்புரம் கிழக்கு, சுழிபுரம், எஸ்.தவராஜா –கோண்டாவில், எஸ்.தவவதனி –வெள்ளாந்தெரு, வண்ணார் பண்ணை, கே.தயாகோபி –சங்குவேலி வடக்கு, மானிப்பாய், எஸ்.தயாகரன் –கோப்பாய் மத்தி, எஸ்.தயாணந்தன் – களபூமி காரைநகர், கே.தெட்சாயினி –கரணவாய் தெற்கு, கரவெட்டி,

ரி.தேவகர்ணன் –கரணவாய், ஜே.தேவதயாளன் –கரவெட்டி, பி.தினேஸ்குமார் –திருநெல்வேலி, எஸ்.திருஞானகௌரி –சுன்னாகம், எஸ்.திருச்செந்தூரன் –இணுவில் மேற்கு சுன்னாகம், என்.உஷானி –நீர்வேலி வடக்கு, ஏ.வஜீகரன் –கரவெட்டி தெற்கு, எஸ்.வலன்ரீனா –வல்வெட்டித்துறை, ரி.வாசுகி –துன்னாலை வடக்கு, கரவெட்டி, எஸ்.வாசுகி –கொக்குவில் மேற்கு, எஸ்.விஜிதா–அரசடி வீதி, பி.விஜிதரன் –அளவெட்டி மேற்கு, ஆர்.வினிதா –குரும்பைகட்டி, புலோலி தென்மேற்கு, வி.வினோகரன் –புலோலி, கே.வித்தியா – புத்தூர் கிழக்கு, எஸ்.வல்வின் –ஆசீர்வாதம் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி.

மாநகர சபை, யாழ்ப்பாணம்.



## பொலிஸார் பயணம் செய்த...

காயமடைந்தவர்கள் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத் தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இவர்களில் மூவரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இதேவேளை சம்பவம் நடைபெற்ற இடத்தை வவுனியா பதில் நீதிபதி எம்.சிற்றம்பலம் சென்று பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்டார்.

இக் குண்டுத் தாக்குதல், சம்பவம் இராணுவ வாகனங்களும் போக்குவரத்து வாகனங்களும் போய் வருகின்ற ஏ-9 வீதியில் வவுனியா நகர தனியார் பேருந்து நிலைய சந்தியில் இடம்பெற்றிருக்கின்றது.

(ச-5)

# தமிழக மீனவர்களை தாக்கவில்லை என்கிறது இலங்கைத் தூதரகம்

(சென்னை)

**கச்சதீவில்** தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்கவில்லை என இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

**இது குறித்துச்** சென்னையிலுள்ள இலங்கைத் துணைத் தூதரகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

கச்சதீவு கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்களை இலங்கைக் கடற்படை தாக்கியதாகவும் அதில் ஒருவர் இறந்ததாகவும் ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டு சம்பந்தமாக உண்மையான தகவல்களைப் பெறுவதற்காக இலங்கைக் கடற்படையின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது.

முழுமையான விசாரணைக்குப் பின் இந்தக் குற்றச்சாட்டுக்களை இலங்கைக் கடற்படை முற்றிலுமாக மறுத்துள்ளது. இலங்கைக் கடற்படையினர் இந்த சம்பவம் நடந்த பகுதியில் தமது ரோந்துப் படகுகள் எவையும் அந்த நேரத்தில் நிறுத்தி வைக்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான நீண்ட கால நல்லுறவை சீர்குலைக்கும் நோக்கத்திலும் இலங்கைக் கடற்படையின் நற்பெயருக்குக் கலங்கம் ஏற்படுத்தும் வகையிலும் விடுதலைப்புலிகள் போன்ற 3-வது சக்தி ஒன்றின் செயற்பாடாக இது அமைவதற்கும் சாத்தியமுள்ளது என்றுள்ளது. (ச)

## வன்னியில் மனிதாபிமானப்...

ஐ.நாவின் பேச்சாளர் கோர்டன் வெய்ஸ் மேலும் கூறியதாவது, கடந்த வாரம் ஐ.நாவிற்கும் அரசாங்கத்திற்குமிடையில் ஒரு உடன்பாடு ஏற்பட்டது. அதன்படி வன்னியிலிருக்கும் இடம்பெயர்ந்த மக்களுக்கு நேரடியாக உணவுப் பொருள்களை அனுப்ப ஐ.நா. ஒப்புக் கொண்டது.

இடம்பெயர்ந்த சுமார் 2 இலட்சம்பேர் இருக்கின்றார்கள். அவர்களுக்கான முதல் தொகுதி உணவினை இந்த வார இறுதிக்குள் அனுப்ப முயற்சிக்கின்றோம் என்றார்.

வன்னியில் எங்கெல்லாம் மக்கள் இடம்பெயர்ந்திருக்கின்றார்களோ அங்கெல்லாம் உணவு விநியோகம் நடைபெறும். இது பெரும்பாலும் கிளிநொச்சியின் கிழக்கு மற்றும் தென்கிழக்குப் பகுதிகளாகும்.

நாங்கள் கிளிநொச்சியில் உள்ளே புகுந்து செல்லப் போவது கிடையாது. மாறாகக் கிளிநொச்சியைச் சுற்றிப் போகப் போகின்றோம் என்றார்.

இந்த உணவுத் தொகுதிகளில் முக்கியமான விடயம் என்னவென்றால் இந்த உணவுப் பொருள்கள் இடம்பெயர்ந்த மக்கள் பெரும் கூட்டமாக இருக்கும் இடங்களில் நேரடியாக விநியோகிக்கப்படும்.

மேலும் உணவுப் பொருள்கள் அடங்கிய வாகனத் தொடரணியுடன் ஐ.நாவின் சர்வதேச பணியாளர்கள் இருப்பார்கள். அவர்கள் உணவு விநியோகத்தை மேற்பார்வை செய்வார்கள் என்றார்.

இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இருக்கின்ற எங்கள் களஞ்சியங்களிலிருந்து உணவுப் பொருள்கள் வவுனியாவுக்குக் கொண்டு வரப்படுகின்றது. அங்கிருந்து அரச மற்றும் ஐ.நாவின் லொறிகளில் உணவுப் பொருள்கள் ஏற்றப்பட்டு அந்த லொறிகள் ஐ.நா.கொடியுடன் ஐ.நாவின் பாதுகாப்புப் பணியாளர்கள் ஆராயப்பட்ட பாதையூடாகச் செல்லும்.

இந்தப் பாதைகள் குறித்து அரசாங்கத்துடனும் விடுதலைப்புலிகளுடனும் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கின்றது. இந்த லொறிகள் சென்று சேர்வதற்கு இரண்டு நாள்கள் ஆகும் என எதிர்பார்க்கின்றோம் என கோர்டன் வெய்ஸ் கூறினார்.

வன்னியில் அரச அமைப்புகள் மூலமாகத்தான் விநியோகம் நடைபெற வேண்டும் என்பதுதான் எண்ணம். ஆனால் அரச அமைப்புகளுக்கு பெருமளவிலான உதவிகள் தேவை என்பதை ஐ.நாவும் அரசும் உணர்ந்திருக்கின்றது.

அரச அமைப்புகளூடாக எவ்வாறு விநியோகம் நடைபெறப் போகின்றது என்ற நுணுக்கமான விடயங்களை நாங்கள் ஆராய்ந்து வருகின்றோம். மேலும் விநியோகம் கள நிலையில் எவ்வாறு நடைபெறப் போகின்றது என்பதுதான் முக்கியமான விடயமாக இருக்கின்றது.

பாதிக்கப்பட்டவர்கள் இருக்கும் இடத்தில் நேரடியாக விநியோகம் நடைபெற வேண்டும் என்பதுதான் அரசாங்கம் மற்றும் ஐ.நாவின் எண்ணமாக இருக்கின்றது. மேலும் நாங்கள் வவுனியாவிலிருந்து செயற்படுவோமே தவிர நாங்கள் மீண்டும் வன்னியிலிருந்து செயற்படப் போகின்றோம் என நினைக்கக் கூடாது என்றார்.

(ச-3)

## யாலப் பகுதியில் மீண்டும் புலிகள் தாக்குதல்

(கொழும்பு)

அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள யாலப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை விடுதலைப்புலிகளின் சிறப்பு அணி நடத்திய தாக்குதலில் இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். ஒருவர் காயமடைந்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார மேலும் கூறியதாவது,

யாலப் பகுதியில் மூன்றாவது வலயப் பகுதியில் இத் தாக்குதல் நடைபெற்றுள்ளது. அப் பகுதிக்குப் பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. இதில் காயமடைந்த இராணுவத் தரப்பைச் சேர்ந்த ஒருவர் புத்தள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தினையடுத்து அப் பகுதியில் தேடுதல்கள் இடம்பெற்று வருகின்றன என்றார் அவர்.

(ச-5)

## 4 ஆம் கட்ட ஈழப் போரின்...

செல்வதற்குத் தயாராகவுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்த உணவு வாகனத் தொடரணி செல்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளபோதும் அதனைக் கொண்டு செல்லும் போது பாதுகாப்பு அச்சம் இருப்பதை உணர முடிகின்றது. எனவே ஏ-9 வீதியில் செல்லவுள்ள இந்த வாகனத் தொடரணி பின்னர் கிழக்குப் புறமா கத் தமது பாதையை மாற்றிச் செல்லவே ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந் நிலையில் அடுத்து வரும் வாரத்தில் வன்னியில் பாரிய மோதல்கள் இடம்பெறப் போவதை உணர முடிகின்றது. மணலாற்றிலிருந்து முன்னேறும் படையினருக்குத் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிலக் கண்ணிகள் பாரிய தடைகளை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்னியில் மோதல்கள் ஏற்படும்போது அதற்கு மாறாக கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் பாரிய தாக்குதல்களை நடத்துவர் என்ற நிலை காணப்படுகின்றது.

எனினும் இதனைத் தான் சமாளிக்க முடியும் எனப் படைத் தரப்புத் தெரிவித்துள்ளதாக இக்பால் அத்தாஸ் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கிழக்கில் தற்போது கருணாவின் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள், தமிழீழ விடுதலைப்புலிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் படையினருக்கு உதவி வருகின்றனர்.

இதேவேளை வருகின்ற நாள்கள், வருகின்ற வாரங்கள் 4-வது கட்ட ஈழப் போரில் பாரிய மோதல்கள் ஆரம்பமாகப் போவதையே இன்றைய கள நிலைவரங்கள் எடுத்துக் காட்டுவதாக இக்பால் அத்தாஸ் எதிர்வு கூறியுள்ளார்.

(ச-5)

## மட்டக்களப்...

முகாமைத் தமது கட்டுப்பாட்டில் 15 நிமிடம் வரை வைத்திருந்த விடுதலைப்புலிகள் அங்கிருந்தவற்றினை முழுமையாகத் தாக்கியழித்துள்ளனர். இத் தாக்குதலின்போது இராணுவம் மற்றும் துணை இராணுவக் குழுவினரைச் சேர்ந்த ஆறுபேர் கொல்லப்பட்டனர். ஏனையோர் தப்பியோடி விட்டனர்.

இதில் விடுதலைப்புலிகளால் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன எனப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

(ச-5)

## அரசு சாரா நிறுவனங்களுக்...

பாட்டுப் பகுதிகளுக்கு வருவதற்கு மூன்று வாரங்களுக்கு அதிகமான கால அவகாசம் வழங்கப்பட்டிருந்ததாகவும் குறித்த காலப் பகுதியில் ஐக்கிய நாடுகள் அமைப்பு உள்ளிட்ட பல அமைப்புக்கள் வெளியேறியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

விடுவிக்கப்படாத பிரதேசத்தில் தொடர்ந்தும் தங்கியிருக்கும் அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர்களின் பாதுகாப்பிற்கு அரசாங்கம் பொறுப்பில்லை.

அரசாங்கப் படையினர் கிளிநொச்சியை மீட்டெடுக்கும் நோக்கில் முழுவீச்சில் இராணுவ நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும் இவ்வாறான ஓர் பின்னணியில் தன்னார்வத் தொண்டு ஊழியர்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதமளிக்க முடியாதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ச-5)


# மரண அறிவித்தல்



## என்.எம். கந்தசாமி

(ஓய்வு பெற்ற மருந்துக் கலவையாளர், உதயன், தினகரன் செய்தியாளர், அரசாங்க மருந்துக் கலவையாளர் சங்க யாழ். மாவட்டக் கிளை முன்னாள் செயலாளர், வட. இலங்கைப் பத்திரிகையாளர் சங்க உப தலைவர், பண்டத்தரிப்புக் கிராம அபிவிருத்திச் சங்க உப தலைவர்)

கீரிமலை வீதி, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட மார்க்கண்டு கந்தசாமி அவர்கள் 28.09.2008 ந் திகதி இறைபதமடைந்து விட்டார்.

இவர் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், சாந்தினி (சிரேஷ்ட விரிவுரையாளர், வரலாற்றுத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்), சிவகாந்தன் (பிரான்ஸ்), சுகந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,

அருளானந்தம் (சென்.அன்ரனிஸ் இன்டஸ்றீஸ் குறூப்), கமலறஞ்சினி (பிரான்ஸ்), சர்வானந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், மதுமிதன், அகல்யா, நிவேதா, நிதுஷன், நிலானன்,நவீதா, மிதுனா, சயானா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 29.09.2008 ந் திகதி பி.ப. 2.30 மணிக்கு கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு, 'சிவபவனம்' இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாபேரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

மனைவி - க.நாகேஸ்வரி

மகள் - அ.சாந்தினி

(1775)


## வன்னி மக்களின் பாதுகாப்பை...

மோதலில் பாதிக்கப்பட்டுள்ள சிவிலியன்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி அவர்களது அடிப்படை மனிதாபிமானத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியது இலங்கை அரசாங்கத்தின் கடப்பாடாகும்.

இலங்கையின் மனித உரிமைகளின் நிலை மற்றும் வடக்கில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள மக்களின் பரிதாபநிலை என்பன மிகுந்த கவலையளிப்பதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள பிரான்ஸ் தெரிவித்துள்ளது.

மோதலில் பாதிக்கப்பட்டுள்ள சிவிலியன்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி அவர்களது அடிப்படை மனிதாபிமான தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியது இலங்கை அரசாங்கத்தின் கடப்பாடாகும் என அது சுட்டிக்காட்டியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள பிரான்ஸ், இலங்கையின் நிலைவரம் குறித்து விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது, இலங்கையின் உள்நாட்டுப் போர் சமகால விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக இணைத் தலைமை நாடுகள் கடந்த 24 ஆம் திகதி நியூயோர்க்கில் கூடியமை வரவேற்கத்தக்கது.

இலங்கையின் மனித உரிமைகளின் நிலை, மோதல்கள் காரணமாக வடக்கில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள மக்களின் பரிதாபநிலை என்பன இணைத் தலைமை நாடு என்ற ரீதியிலும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப் பொறுப்பேற்ற நாடென்ற வகையிலும் எமக்கு மிகவும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

மோதல்களில் ஈடுபடும் இரு தரப்பும் சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மதித்து நடக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம். மோதலால் பாதிக்கப்பட்டுள்ள சிவிலியன்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதும் அவர்களது மனிதாபிமானத் தேவைகளைப் பூர்த்தி செய்வதும் இலங்கை அரசாங்கத்தின் கடமையாகும் என்றுள்ளது. (ச)


### சுவாமி விவேகானந்தர் பற்றிய அழகிய கண்காட்சி விளக்கக் குறிப்புக்களுடன்

இடம் :- சாவகச்சேரி மகளிர் கல்லூரி

நேரம் :- பி.ப. 12.30

திகதி :- 30.09.2008 செவ்வாய்க்கிழமை

கல்லூரி மாணவர் தலைவி மங்கல விளக்கேற்றியதும் பாடசாலை மாணவர்களுக்கு கண்காட்சி திறந்து வைக்கப் படும். இளைய சமுதாயத்தினருக்கு ஓர் அரிய விருந்து.

செயலாளர்

ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்

பருத்தித்துறை.

27.09.2008

(C-1611)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.09.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.